


නාවෙළි

NAAVELI

# நாவெளி

நாவிதன்வெளி பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்

නාවිදන්වෙලි ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මාසික ඉ - සඟරාව

NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E-MAGAZINE

www.navithanveli.ds.gov.lk | ds@navithanveli.ds.gov.lk | DSNavithanveli | 0755424333

மலர்: 22 ✦ இதழ்: 50 ✦ 2025ஆம் வருடம் ✦ ஐப்பசி மாதம் ✦ இருபத்தைந்தாம் திகதி





## 09 பெரும்போக பயிர்செய்கை தொடர்பான ஆரம்பக் கூட்டம்



## 07 வாணி விழாவும், கல்விக்கு ஊக்குவிப்பும்



## 06 யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகள் கையளிப்பு





## 08 தேசிய விளையாட்டு வாரமும், ஆரோக்கியமும்

நாவெளி NAAVELI
நாவெளி
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி

ds@navithanveli.ds.gov.lk
சனிக்கிழமை / மலர் - 22 / இதழ் - 50 / 25 ஐப்பசி 2025


| | |
|---|---|
| அபிவிருத்திப் பாதையில் | 04 |
| பொருண்மியம் | 18 |
| சுற்றுச்சூழல் | 20 |
| தேகாரோக்கியம் | 22 |
| கதைச்சாளரம் | 24 |
| மருத்துவமும் நாமும் | 26 |
| உலக அரசியல் | 28 |
| அறிவுக் களஞ்சியம் | 30 |
| கல்வி | 32 |
| மானுடம் | 34 |
| பெண்ணியம் | 36 |
| சட்டம் கற்போம் | 40 |
| கவிதைச்சாரல் | 42 |
| கதம்பம் | 43 |
| படலையைத் தேடி | 44 |

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் 22இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இருபத்தொரு மாதங்களாக மாதாந்த மின்னிதழை வெளியிடுவதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். அந்த வகையில் இவ் வருடத்தின் பத்தாவது மலராக பல்வேறு செய்திகள் மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 22 உங்கள் கரங்களில் இன்று தவழ்கின்றது.

முதுமையின் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினம் கொண்டாடப்படுகின்றது. இது சமூகத்திற்கு முதியோர்கள் வழங்கிய பங்களிப்புகளை கௌரவிப்பதற்கும் அவர்களின் கண்ணியம், சுதந்திரம் மற்றும் சமூகத்தில் அவர்களின் உள்ளடக்கத்தின் முக்கியத்துவம் என்பவற்றை எடுத்துக்காட்டுவதற்குமான ஒரு நாளாகும்.

மனிதர்கள் வயதாகும்போது, அவர்களின் உடல் வலிமை குறையக்கூடும், ஆனால் அவர்களின் உணர்ச்சிகள் எப்போதும் போலவே ஆழமாகவும் உணர்திறன் மிக்கதாகவும் இருக்கும். முதியவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பெற்றுக் கொண்ட அனுபவங்கள், ஞானம் மற்றும் நினைவுகளைச் சுமந்து வந்திருப்பார்கள். அவர்கள் தங்கள் பிற்காலத்தில் பொருள் மற்றும் பண ரீதியான தேடல்களில் நாட்டம் காட்டுவதை விட, அவர்களைச் சுற்றியுள்ளவர்களிடமிருந்து உண்மையான உணர்வு ரீதியான தொடர்பு மற்றும் புரிதலைத்தான் அதிகம் எதிர்பார்க்கின்றனர்.

பெரும்பாலும், நவீன வாழ்க்கையின் அவசரத்தில், எமது வீடுகளில் உள்ள பெரியவர்களின் உணர்வுசார் தேவைகளை நாம் கவனிக்காமல் விட்டு விடுகிறோம். அவர்களில் பலர் தனிமையை அனுபவிக்கிறார்கள், குறிப்பாக அவர்களின் பிள்ளைகள் தமது தொழில்களில் அதிகமாக ஈடுபட்டவர்களாக இருக்கும்போது அல்லது தொலைவில் வசிக்கும்போது. இந்த உணர்வு ரீதியான தொலைவு எந்த உடல் நோயையும் விட அதிக வேதனையாக இருக்கும். வயதானவர்கள் உண்மையிலேயே ஏங்குவது தாம் மதிப்புமிக்கவர்களாக உணரப்படுதல், செவிமடுக்கப்படுதல் மற்றும் நேசிக்கப்படுதல் போன்றவற்றிகாகவாகும். அவர்களின் கதைகளைக் கேட்பது, அவர்களுடன் நேரத்தைச் செலவிடுதல் அல்லது பாசத்தை வெளிப்படுத்துதல் போன்ற எளிய செயல்கள் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் உளப் பூரிப்பு உணர்வையும் தரும்.

உணர்வு ரீதியாக வாழ்க்கை மீதான பற்றுதல் முதியவர்களுக்கு ஒவ்வொரு நாளும் சிரிக்க ஒரு காரணத்தை அளிக்கிறது. இது அவர்களின் சுய மதிப்பை வலுப்படுத்துகிறது மற்றும் பாதுகாப்பாக உணர உதவுகிறது. குடும்ப உறுப்பினர்கள் அக்கறையையும் அன்பையும் காட்டும்போது, அது தலைமுறைகளுக்கு இடையிலான பிணைப்பை வலுப்படுத்துவதுடன் ஒற்றுமை உணர்வையும் வளர்க்கிறது. மேலும், உணர்ச்சி ரீதியான நெருக்கம் முதியவர்களின் மன மற்றும் உடல் நல்வாழ்வை நேர்மறையான செல்வாக்கிற்கு உட்படுத்தி, பதட்டம் மற்றும் மனச்சோர்வைக் குறைக்கிறது.

நம் பெரியவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வது வெறும் கருணைச் செயல் மட்டுமல்ல - அது ஒரு தார்மீகக் கடமை மற்றும் நன்றியுணர்வின் பிரதிபலிப்பு. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் ஒரு காலத்தில் நம்மை தன்னலமின்றி கவனித்துக்கொண்டார்கள். அவர்களுக்கு அன்பு, பொறுமை மற்றும் மரியாதை அளிப்பதுதான் நாம் செய்யக்கூடிய மிகக் குறைந்த விஷயம். அவர்களுடன் இணைந்து வாழ்வதற்கும், அவர்களின் சொல்லப்படாத உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வதற்கும், அவர்கள் ஒருபோதும் தனியாக இல்லை என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்கும் முயற்சிப்போம்.

முடிவாகக் கூறப்போனால் உணர்வுபூர்வமான பற்றுதல் என்பது பெரியவர்களின் தேவை மட்டுமல்ல - அது அவர்களின் வாழ்க்கையையும் நம் வாழ்க்கையையும் வளப்படுத்தும் மனிதகுலத்தின் ஒரு அழகான வெளிப்பாடுமாகும்.

என்றும் அன்புடன்
ஆசிரியர்




# GovPay இலங்கை அரசும் மின்னணு கட்டண முறைமையும்

இலங்கை குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களினால் இவ்வருடம் ஆரம்பித்து வைக்கப்பட்ட"சுத்தமான இலங்கை" (Clean Sri Lanka) தேசிய நிகழ்ச்சித் திட்டமானது, இலங்கையைச் சுத்தமான, பசுமையான, மற்றும் நிலையான நாடாக மாற்றுவதை இலக்காகக் கொண்ட ஒரு நாடு தழுவிய முன்னெடுப்பாகும். இவ்வேலைத்திட்டமானது சமூகம், சுற்றுச் சூழல் மற்றும் விழுமிய முறை (Ethical) ஆகிய மூன்று தூண்களை உள்ளடக்கி இலங்கையில் நீடித்த சமூக, கலாசார மாற்றத்தை ஏற்படுத்துவதனை தொலைநோக்காக கொண்ட திட்டமாகும். இந்த தொலை நோக்கினை அடைவதற்கான இலங்கை அரசாங்கத்தின் 03 பகுதிகளில் ஒன்றான டிஜிட்டல் பொருளாதாரத்தின் பரிவர்த்தனை தளமாக 'GovPay' காணப்படுகிறது.

உலக நாடுகளில் அரசு சேவைகளுக்கான கட்டணங்கள் மின்னணு வழியில் (e-payment) வசூலிக்கப்படும் முறைமையாக GovPay காணப்படுகிறது. இது அரசு, மக்கள், மற்றும் வணிக நிறுவனங்களுக்கு இடையே பாதுகாப்பான, விரைவான மற்றும் தெளிவான பணப் பரிமாற்றத்தை ஏற்படுத்துகிறது. பல நாடுகளில் வரி, அபராதம், சேவை கட்டணங்கள் போன்றவை GovPay மூலம் செலுத்தப்படுகின்றன. இத்திட்டம் டிஜிட்டல் ஆட்சி (Digital Governance) மற்றும் பணமில்லா பொருளாதாரம் (Cashless Economy) நோக்கங்களுக்குத் துணைபுரிகிறது. இந்தியா , சீனா, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா, பிரேசில், சிங்கபூர், ஜப்பான், போன்ற பல நாடுகள் இந்த முறைமையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றன.

GovPay திட்டம் பிப்ரவரி 2025 தொடக்கத்தில் 16 அரசு நிறுவனங்களை ஒருங்கிணைத்து தொடங்கப்பட்டது. மேலும் 30 நிறுவனங்களை அடுத்தடுத்த இரண்டு கட்டங்களில் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது, GovPay முறைமை இலங்கையின் டிஜிட்டல் ஆட்சி (Digital Governance) நோக்கத்தை அடைய உதவுகிறது. இது மக்கள் மற்றும் அரசாங்கத்தின் உறவை நவீனமாக மாற்றும் ஒரு முக்கியமான கட்டமாகும். எதிர்காலத்தில் அனைத்து அரசு சேவைகளும் இந்த மின்னணு தளத்துடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. படிப்படியான வெளியீடு, தடையற்ற, நட்பான பயனர் அனுபவத்தை உறுதி செய்வதற்காக மேலும் வடிவமைக்கப்பட்டுள்ளது,




GovPay என்பது இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முகவர் நிறுவனம் (ICTA) மற்றும் இலங்கை மத்திய வங்கியின் (CBSL கீழ் இயங்கும் நாட்டின் தேசிய கட்டண வலையமைப்பான LankaPay ஆகியவற்றின்தலைமையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். டிஜிட்டல் பொருளாதார அமைச்சினால் பராமரிக்கப்படும் இந்த தளம், வருவாய் வசூல் செயல்முறைகளை நவீனமயமாக்குவதையும், அரசாங்க நிதி பரிவர்த்தனைகளில் மேம்பட்ட கட்டுப்பாடு, துல்லியம், பாதுகாப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

GovPay என்பது இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்திய ஒரு மின்னணு கட்டண முறைமை (Digital Payment System) ஆகும். இதன் முக்கிய நோக்கம் பொதுமக்கள் மற்றும் அரசாங்கத்திற்கிடையே நடைபெறும் அனைத்து நிதி பரிமாற்றங்களையும் திறம்பட, பாதுகாப்பாக மற்றும் வெளிப்படையாக மாற்றுவதாகும். முன்பு அரசாங்க கட்டணங்களை செலுத்துவதற்காக மக்கள் வங்கிகளிலும் அலுவலகங்களிலும் நீண்ட வரிசையில் நிற்க வேண்டியிருந்தது. ஆனால் GovPay முறைமையின் மூலம் மக்கள் தங்களது வீட்டிலிருந்தே, இணையத்தின் வழியாக எந்த நேரத்திலும் அரசு கட்டணங்களைச் செலுத்த முடிகிறது. இதனால் நேரம், ஆற்றல் மற்றும் செலவுகள் மூன்றும் மிச்சமாகின்றன.

GovPay வழியாக வாகன பதிவு மற்றும் புதுப்பித்தல், நில வரி, பாஸ்போர்ட் மற்றும் தேசிய அடையாள அட்டை கட்டணம், பல்கலைக்கழக மற்றும் தேர்வு கட்டணங்கள் போன்ற பல அரசு சேவைகளுக்கான பணத்தைச் செலுத்தலாம். இந்த முறைமையில் கடன் அட்டை (Credit Card) வங்கி அட்டை (Debit Card) அல்லது இணைய வங்கி (Internet Banking) மூலம் பணம் செலுத்துவது மிகவும் எளிதாகும்.

GovPay பயன்படுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கும் பல நன்மைகள் உள்ளன. பண பரிமாற்றங்கள் மின்னணு முறையில் நடைபெறுவதால் ஊழல் மற்றும் தவறான பரிமாற்றங்கள் குறைகின்றன. அதே நேரத்தில் வரி வசூல் மற்றும் நிதி கண்காணிப்பு தெளிவாகிறது.

மேலும், மின்னணு பற்றுச்சீட்டு (e-Receipt) வழங்கப்படுவதால் பொதுமக்கள் தங்களது கட்டணங்களின் பதிவை எப்போதும் சரிபார்க்க முடிகிறது. அனைத்துப் பொது மக்களையும் அரசின் முறைசார்ந்த நிதிப் பரிமாற்ற கட்டமைப்புக்குள் கொண்டுவர முடிகின்றது. மக்களால் செலுத்தப்பட்டுள்ள வரிகள், கட்டணங்கள் பற்றியும் மேலும் செலுத்தப்பட வேண்டிய தொகை பற்றியும் விரைவாக தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடிவதால் அபிவிருத்தி திட்டங்கள், நிருவாகச் செயற்பாடுகள் குறித்து விரைவாக தீர்மானங்களை எடுக்க அரச கட்டமைப்புக்கு இலகுவாய் இருக்கும். மனிதர்கள் பணப் பரிமாற்றம் சாதாரண பாரம்பரிய முறையில் செய்யும்போது ஏற்படக் கூடிய தவறுகள் இல்லாமல் செய்யப் படுவதுடன், களவு, கொள்ளை போன்ற பிரச்சனைகள் குறையும். வழமையான பாரம்பரிய பணப் பரிமாற்றல் முறைகளில் உள்ள காகிதாதிகள் செலவு, போக்குவரத்து, எரிபொருள் செலவு போன்ற பல விடயங்கள் இழிவளவாகுவதால் இது சூழலுக்கு நட்புணர்வான முறையாகவும் அமைகின்றது.

*தொகுப்பு :*

*திட்டமிடல் பிரிவு*
*பிரதேச செயலகம்*
*நாவிதன்வெளி*

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகள் கையளிப்பு

-மு. கிருஸ்ணரூபன்




நாவிதன்வெளி மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுகளிற்குட்பட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான நகர அபிவிருத்தி நிருமாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சினால் நிருமாணிக்கப்பட்ட வீடுகளைக் கையளித்து, அதற்கான சான்றிதழை வழங்கிவைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஒக்டோபர் 03ஆம் திகதி பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவருமான கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா அவர்கள் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட செயலாளர் திரு. சிந்தக்க அபேவிக்கிரம, அம்பாறை மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திரு. ஆ. யு. முனாசிர், நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் கௌரவ திரு. இ. ரூபசாந்தன், உறுப்பினர் கௌரவ திரு. மு. நிரோஜன், நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. சோ. நிருபா, கணக்காளர் திரு. க. றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, நிருவாக உத்தியோகத்தர் திரு. ஓ. கே. கீர்த்தி குசுமிந்த, நிருவாக கிராம சேவை உத்தியோகத்தர் திரு. மனோஜ் இந்ரஜித், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மேலும், மத்தியமுகாம்-01, சாளம்பைக்கேணி-04 கிராம அலுவலர் பிரிவுகளில் அதிதிகளால் பயனாளிகளுக்கான வீடுகள் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


















நாவெளி NAAVELI
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
சனிக்கிழமை / மலர் - 22 / இதழ் - 50 / 25 ஐப்பசி 2025

# வாணி விழாவும், கல்விக்கு ஊக்குவிப்பும்

நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்த வாணி விழா பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஒக்டோபர் 01ஆந் திகதியன்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. சீ. நிருபா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராஜா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம், நிருவாக கிராம உத்தியோகத்தர் திரு. மனோஜ் இந்ரஜித் ஆகியோருடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். கும்பம் வைத்தல் மற்றும் வாணி விழா பஜனை ஆகிய நிகழ்வுகள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில், பிரதேச செயலாளரின் வாணி விழா சிறப்புரையுடன், பூஜை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அத்துடன், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட வசதி குறைந்த பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

-என்.நீலேந்திரன்









































# தேசிய விளையாட்டு வாரமும், ஆரோக்கியமும்




தேசிய விளையாட்டு வாரத்தினை முன்னிட்டு தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான நடைப்பயிற்சியும் அதனுடன் இணைந்ததாக உடற்பயிற்சி நிகழ்வும் 2025 ஒக்டோபர் 07ஆம் திகதி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா அவர்களுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதுடன் பிரதேச செலக விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ப. வசந்த் அவர்களின் நெறிப்படுத்தலில் உடற்பயிற்சி இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

-ப. வசந்த்







# பெரும்போக பயிர்செய்கை தொடர்பான ஆரம்பக் கூட்டம்



நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குடபட்ட சடயந்தலாவ கண்டப்பகுதியில் இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள பெரும்போக பயிர்ச்செய்கை தொடர்பான ஆரம்பக் கூட்டம் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. சீ. நிருபா அவர்களின் தலைமையில் 2025 ஒக்டோபர் 10ஆம் திகதி நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, மாகாண நீர்ப்பாசன உத்தியோகத்தர் திரு. V. உதயகுமாரன் ஆகியோருடன் சவளக்கடை கமநலசேவை விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், சவளக்கடை கமநல சேவை மத்திய, மாகாண போதனாசிரியர்கள், கிழக்கு மாகாண நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள், வன விலங்குகள் சீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், சவளக்கடை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




-இ. கோகுலவாணி





நாவெளி NAAVELI நாவெளி
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
சனிக்கிழமை / மலர் - 22 / இதழ் - 50 / 25 ஐப்பசி 2025

# சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையும், பெற்றோருக்கான தெளிவூட்டலும்





2025ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் உளச் சமூக ஒன்றியக் கூட்டமானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஒக்டோபர் 07ஆம் திகதி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. சீ. நிருபா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம், நிருவாக கிராம அலுவலர் திரு. மனோஜ் இந்ரஜித், அவர்களுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அரச நிறுவனங்களான கோட்டக்கல்வி அலுவலகம், சுகாதார வைத்திய பணிமனை, சிறுவர் நன்னடத்தை அலுவலகம் போன்றவற்றின் பிரதிநிதிகளும் கல்முனை ஆதார வைத்தியசாலை உளநல பிரிவு மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் அரச சார்பற்ற நிறுவனங்களான SWOAD, Islamic Relief போன்றவற்றின் உத்தியோகத்தர்களும் நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு, கலாசாரப் பிரிவு, சமுர்த்தி பிரிவு ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பிலான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில், இலக்கிற்குள் உள்ளாக்கப்படும் சிறுவர்களின் பெற்றோருக்கான தெளிவூட்டல் செயற்திட்டங்களை நான்காம் காலாண்டிற்குள் மேற்கொள்ள தீர்மானங்கள் எடுக்கப்பட்டு இருந்ததுடன், பிரதேச மட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் பங்களிப்பும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்விற்காக நிதி அனுசரணையை சிறுவர் நன்னடத்தை திணைக்களம் வழங்கியிருந்தது.

-டி. யாசுகி

# மகளிர் சங்கங்களும், அவற்றின் செயற்பாடுகளும்



நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கான விழிப்புணர்வுப் பொதுக் கூட்டமானது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராஜா அவர்களின் தலைமையில் 2025 செப்டம்பர் 10ஆம் திகதியன்று நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

பிரதேசத்தில் காணப்படும் மகளிர் சங்கங்கள் எவ்வாறு செயற்படுவது, ஒவ்வொரு சங்கங்களும் ஏனைய சங்கங்களுடன் எவ்வாறு பங்குபற்றுதல்களைப் பேணுவது, மகா சங்கத்தின் முன்னேற்றகரமான செயற்பாடு போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்பட்டு, அதன் முன்னெடுப்புகள் பற்றியும் குறித்த கலந்துரையாடலில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.



# தேசிய சிறுவர் வாரமும், அறநெறியும்

-என்.நீலேந்திரன்





தேசிய சிறுவர் வாரத்தினை முன்னிட்டு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலிற்கமைவாக சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதில் சமயத் தலைவர்களின் பொறுப்புகள் எனும் தொனிப்பொருளிலான நாவிதன்வெளி பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட ஆலயங்களின் அறங்காவலர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கானது 2025 ஒக்டோபர் 08ஆம் திகதி மத்திய முகாம்-01 கிராம அலுவலர் பிரிவிலுள்ள வாணி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திரு. க. நீலேந்திரன் அவர்களின் தலைமையிலும் திருமதி. சறோஜினி பாலசுந்தரம் அவர்களளின் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் வாணி அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் திரு. த. சித்திரகுமார், சித்திவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் திரு. மு. ஜெயசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கிராமிய சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் கலாசார விழுமியங்கள் தொடர்பில் கருத்துகளும் முன்வைக்கப்பட்டன.

# சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு

-டெ. றொசாயிறோ

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வானது நாவிதன்வெளி - 01 மற்றும் சாளம்பைக்கேணி 04 கிராம அலுவலர் பிரிவுகளில் 2025 செப்டம்பர் 26 மற்றும் 30 ஆந் திகதிகளில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திருமதி. U. I. ஹபீலா மற்றும் கள உத்தியோகத்தர் திருமதி. R. அனுஷ்கா ஆகியோரும் நாவிதன்வெளி 01 கிராம அலுவலர் பிரிவிற்கான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. P. கேதிகா மற்றும் மகளிர் அபிவிருத்தி கள உதவியாளர் U. றமீஸா, ஆலோசனை உதவியாளர் திருமதி. K. தயாளினி, மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. N.துஷ்யந்தி, I. L. M. அன்பாஸ், A. K.ஹனா ஆகியோரும் கலந்து கொண்டனர்.





நாவிதன்வெளி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. டெ. றொசாயிறோ அவர்கள் கலந்து கொண்டு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கினார். இந்நிகழ்வுக்கான அனுசரணையை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (Muslim Women's Research And Action Forum - MWRAF) வழங்கியிருந்தது.

# பனம்பழ சவர்க்கார உற்பத்தி

நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் பனம்பழ சவர்க்காரம் தயாரிப்பதற்கான பயிற்சிக் கருத்தரங்கானது பிரதேச செயளாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராஜா அவர்களின் தலைமையின் கீழ் 2025 ஒக்டோபர் 14ஆம் திகதியன்று நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் கல்முனை வடக்கு பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. எஸ். தர்சன் அவர்கள் வளவாளராக கலந்து கொண்டு இதற்கான பயிற்சியினையும் தெளிவூட்டல்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான செ. கலாயினி, கோ. சசிவதனி, இவர்களுடன் இணைந்து க. கமல்ராஜ் மற்றும் திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்களும் பங்கு பற்றியிருந்தனர்.

செ. கலாயினி















# வீட்டு வன்முறையும் பெண்களும்









இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் கல்முனை பிராந்தியத்தின் ஏற்பாட்டில் UNDP யின் அனுசரணையில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலில் "வீட்டு வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல், விவாகரத்தின் பின்னரான பெண்களின் உரிமைகள்" தொடர்பில் விழிப்புணர்வூட்டலுக்கான கருத்தரங்கு மற்றும் சட்டம் சம்பந்தமான ஆலோசனையும் வழிகாட்டலும் (Clinic) 2025 ஒக்டோபர் 15ஆம் திகதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது

இதில் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் கல்முனை பிராந்தியத்தின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி ஜனாபா VT. ஹஸீனா அவர்கள் பிரதானமாக கலந்து கொண்டு இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நாடாத்தியதுடன் அவருடன் இணைந்து சிரேஷ்ட சட்டத்தரணி ஜனாப் றொஷான் அக்தர் மற்றும் சட்டத்தரணி ஜனாப் M.M.M முபீன் ஆகியோரும் கலந்து கொண்டு வீட்டு வன்முறையிலிருந்து பாதுகாப்பு பெறல், விவாகரத்தின் பின்னரான உரிமைகள், ஆலோசனை பெறக்கூடிய விடயங்கள், குடும்ப சட்டம், பராமரிப்புச் சட்டம், விவாகரத்து, பிள்ளைப்பாதுகாவல் மற்றும் கட்டுக்காவல் போன்றவற்றிற்கான தேவையான ஆலோசனைகளை வழங்கினர். இதில் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் கல்முனை பிராந்தியத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் இப்பிரதேசத்தில் உள்ள சட்ட ஆலோசனை தேவைப்படும் பெண்கள் மற்றும் மகளிர் சங்க அங்கத்தவர் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

-டெ. றொசாயிறோ







# உளநலம் தொடர்பான விழிப்புணர்வு






சர்வதேச உளநல வாரத்தை முன்னிட்டு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கு அமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சது/ றாணமடு இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு உளநலம் மற்றும் அவர்களது கடமைகள் பொறுப்புகள் தொடர்பான விழிப்புணர்வும், சாளம்பைக்கேணி - 05 கிராம அலுவலர் பிரிவு மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கு உளநலம் தொடர்பான விழிப்புணர்வும் 2025 ஒக்டோபர் 16ஆம் திகதி நடாத்தப்பட்டது.

இதில் நாவிதன்வெளி பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் திருமதி. கே. தயாளினி, மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் யு.றமீசா ஆகியோர் தெளிவூட்டல்களைகளை வழங்கியிருந்தனர்.

-கே. தயாளினி

# வன்முறைகளைத் தடுத்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்தல்

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயல் முன்னணியால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்தின் ஒருபகுதியாக "வன்முறைகளை இனம் காணலும் தடுப்பதற்கான வழிகாட்டலும்" எனும் செயற்பாடு இடம்பெற்றது.








இதற்காக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சொறிக்கல்முனை 2, 3 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து 06 இளைஞர், யுவதிகள் (Champion Team) தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகள் மற்றும் கிராம மட்ட பிரதிநிதிகள் அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு எதிர்கால செயற்பாடுகள் மற்றும் தங்களின் பிரதேசத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு தேவையான விழிப்பூட்டல்கள், ஆலோசனைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் சொறிக்கல்முனை 01 கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஹொலிகுறோஸ் மண்டபத்திலும், சொறிக்கல்முனை - 02 கிராம அலுவலர் காரியாலயத்திலும் நடைபெற்றது. இதில் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நாவெளி NAAVELI
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி

ds@navithanveli.ds.gov.lk

சனிக்கிழமை / மலர் - 22 / இதழ் - 50 / 25 ஐப்பசி 2025

# அனர்த்த முன்னாயத்தம்









வடகீழ் பருவப் பெயர்ச்சி மழைகாலத்தின் போதான அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் கடந்த ஒக்டோபர் 16ஆம் திகதி திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. சீ. நிருபா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம் அவர்களுடன் கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் போன்றோர் கலந்து கொண்டதுடன், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவு மற்றும் கல்முனை பிரதேசங்களுக்குட்பட்ட அரச திணைக்களங்களான அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம் பொலிஸ் நிலையம், கடற்படை முகாம், இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்து சபை, ஸ்ரீலங்கா டெலிகொம், கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, லங்கா சதோச, வலயக்கல்வி அதிகாரி பணிமனை போன்றவற்றின் உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

குறித்த காலங்களின் ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கான முன்னாயத்தத் திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துவது தொடர்பான தீர்மானங்கள் இக்கலந்துரையாடலின் போது மேற்கொள்ளப்பட்டன.





# அன்புடன் காப்போம் உலகை வெல்வோம்

-டி. யாசுகி







சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் தலைமையில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய சிறுவர் வாரத்திற்கான நிகழ்வுகள் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக 2025 செப்டம்பர் 25ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 01ஆம் திகதி வரை "அன்புடன் காப்போம் - உலகை வெல்வோம்" என்ற இவ்வருடத்திற்கான தொனிப்பொருளுக்கமைவாக இடம்பெற்றது.

இதன் முதற்கட்டமாக, நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு 2025 செப்டம்பர் 25ஆம் திகதி இடம்பெற்றதுடன், 26ஆம் திகதி பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை சோதனைக்குட்படுத்தி அவற்றிற்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான வாசகங்கள் அடங்கிய Sticker ஒட்டுதலும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், 2025 செப்டம்பர் 27ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சிறுவர் உரிமைகள் மற்றும் அவர்களின் பணிப் பொறுப்புகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கும் 29ஆம் திகதி மத்திய முகாம் - 02 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கமு/சது/வேப்படித்தோட்டம் வாணி மகா வித்தியாலயத்தில் போதைப்பொருள் பாவனையின் மூலம் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம்பெற்றதுடன், பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டு குறித்த தெளிவூட்டல்களை வழங்கி இருந்தனர். அத்துடன், 29ஆம் திகதியன்று மதத்தலைவர்களை ஒன்றிணைத்து சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதில் சமயத்தலைவர்களின் பணிப்பொறுப்புகள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது, இந்நிகழ்வு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் மற்றும் முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

2025 செப்டம்பர் 30ஆம் திகதியன்று சுகாதார பழக்கவழக்கங்களை மாணவர்களிடையே மேம்படுத்தும் பொருட்டு தரம் 1 தொடக்கம் 5 வரையான பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கானது நாவிதன்வெளி சுகாதார பணிமனை உத்தியோகத்தர்களால் நாவிதன்வெளி கமு/சது/விவேகானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அத்துடன் 2025 ஒக்டோபர் 01ஆம் திகதி சிறுவர்தின தேசிய வைபவத்தினை முன்னிட்டு மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வும், வசதி குறைந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மதிய உணவு பெட்டியும் வழங்கிவைக்கப்பட்டது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல.21 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 2 ம | ய | 3 ம | 4 லை | ■ | 5 ப | 6 ன் |
| 7 ளை | கா | ■ | 8 ணி | வ | 9 ஆ | ■ | ய |
| ய | ■ | ■ | 10 மே | தி | னி | ■ | ரி |
| 11 ரா | 12 மே | டை | க | ■ | ■ | 13 ப் | சூ |
| 14 ஜா | தி | ■ | 15 லை | 16 த | 17 ரு | ஒ | ■ |
| ■ | 18 ம் | 19 ஆ | ■ | 20 சை | வ | ம் | 21 அ |
| 22 ம | ன | ன | 23 ம் | ■ | 24 ம் | ப | க |
| னை | ■ | 25 ம் | ர | தி | உ | ■ | ம் |




1st 200/=
2nd 150/=
3rd 100/=

# குறுக்கெழுத்துப் போட்டி இல – 22

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | ■ | 6 |
| 7 | | | ■ | 8 | | 9 | |
| 10 | | | ■ | ■ | 11 | | |
| | ■ | ■ | 12 | | | | |
| ■ | 13 | 14 | | ■ | ■ | ■ | |
| 15 | | | | ■ | 16 | ■ | ■ |
| 17 | | | ■ | 18 | | | 19 |
| ■ | 20 | | | | | ■ | |

## இடமிருந்து வலம்

01. இதிகாசங்களில் ஒன்று.
07. இதன் அளவே ஆகுமாம் குணம் என்கிறது மூதுரை.
08. வானொலி அலைவரிசைகளுள் ஒன்றை இப்படியும் அழைப்பர்.
10. உலோகங்களை உருக்கி ஊற்றும் செயற்பாடு (குழம்பி).
11. அணிகலன் ஒன்று (குழம்பி).
12. ஒன்றுக்காக இன்னொன்றை வைத்தல் என்றும் பொருள்படும் (குழம்பி).
13. அருள் ஒத்த சொல் (திரும்பி).
15. உடலிலிருந்து வெளியேறும் கழிவுநீர்.
17. பயனற்ற நிலம் (திரும்பி).
18. சந்திரன், மறுபெயர் (திரும்பி)
20. காவிய நாயகி ஒருவர்.

## மேலிருந்து கீழ்

01. கிரீடம் என்றும் சொல்லலாம்.
02. பொழுது என்றும் கூறலாம்.
03. இதற்கு படையே நடுங்குமாம்.
04. இது ஆடாமல் வால் ஆட்டக்கூடாது என்பர்.
05. உணவுப் பொருள் ஒன்று (தலைகீழ்).
06. உதவி என்றும் பொருள்படும் (குழம்பி).
09. சிறப்பு என்றும் கூறலாம் (குழம்பி).
12. வாயில் என்றும் பொருள்படும் (குழம்பி).
13. மன்னர் அமரும் இருக்கை (தலைகீழ்).
14. பாண்டவர்களில் ஒருவர் (குழம்பி).
15. சினிமாத்துறையில் பெயர்பெற்ற ஒருவர் - தற்போது மரணித்து விட்டார்.
16. கீரை வகை ஒன்று (தலைகீழ்).
18. துன்பம் என்பதைக் குறிக்கும் (தலைகீழ்).
19. மிகவும் நுண்ணியது.

**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2025.11.15ஆம் திகதி பி.ப. 04.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**

# Clean Sri Lanka தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2021 – 2024 ஆண்டு காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவித்திட்டம் சம்பந்தமான மீள்பார்வை

மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் 04 ஆண்டுகள் காலப்பகுதியில் துறைசார் அமைச்சுகள், நிரல் அமைச்சுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலமான நிதிப்பங்களிப்புடன் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவி திட்டங்களின் பெறுபேறுகள் அடைவுகளை மதிப்பீடு செய்வதற்காக பிரதேச செயலாளரால் சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோத்தர்கள் மற்றும் அபிவிருத்தி இணைப்பு உத்தியோகத்தர் ஆகிய 03 பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. பிரதேச செயலகப்பிரிவிலுள்ள 20 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து 2025 செப்டம்பர் 30ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதியில் வாழ்வாதார உதவிகளைப் பெற்ற பயனாளிகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. இக்குறிக்கோளை அடைவதற்காக பிரதேச செயலளாளரின் அறிவுறுத்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட வினாக் கொத்து மூலமாகப் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களைக் கொத்தணிக் குழுக்களாகப் பிரித்து பயனாளிகளிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன.

1ஆம் கட்டமாகவும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளை நோக்குமிடத்து கீழ் வரும் திட்ட நிதி மூலங்களிலிருந்து வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.









| S.NO | Name of Programme / Department | No of Project | Amount RS |
|---|---|---|---|
| 1 | Gama Samaga Pilisandara – ( 03 Mn & 04 Mn) | 89 | 5,470,000.00 |
| 2 | PSDG | 5 | 625,000.00 |
| 3 | Provincial Fund | 11 | 370,000.00 |
| 4 | Department of Animal Husbandry | 13 | 490,000.00 |
| 5 | Vithada Resource Centre | 9 | 654,750.00 |
| 6 | Disaster | 1 | 50,000.00 |
| 7 | Small Industrial | 5 | 50,000.00 |
| 8 | CO 19 Project | 9 | 210,000.00 |
| 9 | Foreign Employment | 1 | 50,000.00 |
| 10 | Resettlement | 4 | 250,000.00 |
| 11 | NGO | 115 | 8,936,900.00 |
| 12 | Agriculture Department | 1 | 110,000.00 |
| 13 | Department of Probation | 1 | 30,000.00 |
| | | **264** | **17,296,650.00** |

குறிப்பிட்ட 04 ஆண்டு காலப் பகுதிகளுக்கிடையில் சுமார் 264 பயனாளிகளுக்கு ரூபா 17,296,650.00 பெறுமதியான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு உள்ளன. இதில் 108 பயனாளிகள் தமது வாழ்வாதாரத்தை தொடர்ந்து மேற்கொள்ளாமல் காணப்படுகின்றனர். 156 திட்டங்கள் (பயனாளிகள்) சரியாக மேற்கொள்ளப்பட்டு தற்போது வரைக்கும் நிலைத்திருப்பதுடன், குறிப்பிடத்தக்க வருமானம் பெற்று சிறப்பாக ஜீவனம் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 04 வருடங்களில் 156 திட்டங்களுக்கு ரூபா 1,0711,950.00 அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி மூலமூடாக செலவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக பெண்களை மையமாகக்கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார தொழிலான மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறுகைத் தொழிலுக்கான உபகரணங்கள் வழங்குதல், மற்றும் தையல் தொழில் போன்றன சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள் இதன்மூலம் வருமானம் பெற்று அவர்களது ஜீவனோபாயத்தை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தொகுப்பு:
எம்.எச். ஜலிலா, அபிவிருத்தி உத்தியோகத்தர்
மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்:
எம்.ஐ. அலியார், சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்



# மீண்டும் செல்வோம், இயற்கைக்கு !

இன்றைய காலத்தில் கட்டாய தேவையாக சேதன உரங்கள் மாறியுள்ளன. காரணம் நாம் இன்று "உணவு" என்கின்ற பெயரில் இரசாயனங்கள் கலந்துள்ள நச்சுப் பொருட்களையே உட்கொள்கின்றோம். "சேதன உரங்கள்" என்பவை சூழற் சமநிலையில் பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் இயற்கையான மூலப் பொருட்களில் இருந்து உற்பத்தி செய்யக் கூடியன.

"சேதன உரங்களின்" முக்கியத்துவத்தினை நோக்குவோமானால் மண்ணின் கனிமப் பொருட்களின் அளவினை அதிகரித்து மண்ணின் வளத்தினை அதிகரிக்கின்றன. மண்ணின் நீர்ப் பிடிப்புத் திறனை மேம்படுத்துகின்றன. பயிர் வளர்ச்சிக்குத் தேவையான முக்கிய ஊட்டச் சத்துகளை மெதுவாகவும் தொடர்ச்சியாகவும் வழங்குகின்றன. மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் செயற்பாட்டினை ஊக்குவித்து பயிர் வளர்ச்சிக்கு மறைமுகமாக உதவுகின்றன. மண்ணின் இறுக்கத்தினைக் குறைத்து வேர்கள் எளிதாக ஊடுருவ உதவுகின்றன. மண்ணின் ஆரோக்கியத்தினை பாதுகாத்து விவசாயத்தின் நிலைத்தன்மையினை உறுதி செய்கின்றன. மொத்தத்தில் சேதன உரங்கள் சூழலுக்கும் உயிரங்கிகளுக்கும் நட்பானவையே!

அரை நூற்றாண்டிற்கு முன்பாக இயற்கை விவசாயமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் நவீன தொழில்நுட்பத்தின் விளைவாக உற்பத்தி செய்யப்படுகின்ற "இரசாயன உர வகைகள் மற்றும் கிருமிநாசினிகள் குறுகிய காலத்தில் விளைச்சலை அதிகரிப்பதுடன் பயிர்ச் செய்கைக்குத் தேவையான முக்கிய ஊட்டச் சத்துகளை நேரடியாக வழங்குகின்றன" என்கின்ற நம்பிக்கையின் விளைவாகவும் எளிதான முறையில் கையாளக் கூடியவையாக இருக்கின்ற காரணங்களினால் விவசாயிகள் இரசாயனங்களை பயன்படுத்த ஆரம்பித்தனர்.

இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளின் நீண்ட காலப் பயன்பாட்டினால் மண்ணின் வளம் குறைந்து மலட்டுத்தன்மையைப் பெறுகின்றது. நீர் நிலைகளில் கலப்பதன் மூலம் நீர் நச்சுத் தன்மையடைகின்றது. அது மாத்திரமின்றி மண்ணின் வளத்தை அதிகரிக்கின்ற மண்புழுக்கள் அழிவடைகின்றன. உணவுச் சங்கிலியின் ஊடாக உயிர் அங்கிகளின் உடலைச் சென்றடைகின்றன. பல வகையான இரசாயனங்கள் கலந்த உணவுகளை நேரடியாக உட்கொள்கின்றோம் (பழங்கள், தானியங்கள் மற்றும் காய்கறிகள்), இரசாயனக் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்ட புற்களை உட்கொள்கின்ற விலங்குகளில் இருந்து பெறப்படுகின்ற பால் மற்றும் இறைச்சி போன்ற உணவுகளிலிருந்து மறைமுகமான வகையில் எமது உடலை இரசாயனங்கள் வந்தடைகின்றன. இத்தகைய இரசாயனங்களுக்காக அளவுக்கதிகமான செலவுகளைச் செய்து புற்றுநோய், சிறுநீரக நோய், தோல் நோய் மற்றும் மலட்டுத் தன்மை போன்ற நோய்களை எமது உடலுக்கு கொள்வனவு செய்வதில் தான் நாம் ஆர்வமாக

இருக்கின்றோம் என்பது வேதனையான விடயமே. கடந்த காலங்களில் அரசினால் இரசாயன உரங்கள் மானியமாக வழங்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் அறுவடைக்குப் பின்னர் வயலிலுள்ள வைக்கோலினை எரிப்பது முற்றாக தடை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. குறுகிய கால கட்டத்தில் முற்றாக சேதன உரங்களைப் பயன்படுத்துவது என்பது சற்று சவாலாகவே அமைந்துள்ளது. இவ்வழிமுறை பாரிய வெற்றியைத் தரவில்லை. தற்காலத்தில் விரும்பிய முறையில் உரங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தற்போது சேதன உரங்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் பெரும்பாலான அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அவற்றுள் தேசிய கால்நடை திணைக்களம், விவசாய திணைக்களம், மகாவலி அதிகார சபை, மில்கோ நிறுவனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை போன்றவை குறிப்பிடத்தக்க சில நிறுவனங்களாகும். அத்தோடு விவசாய அமைச்சின் கீழ் பிரதேச மட்டங்களில் இயங்குகின்ற கமநல சேவை நிலையங்களின் ஊடாக சேதன உர உற்பத்திக்கு தேவையான தொழில்நுட்ப இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவு (செயலமர்வுகள் மூலம்) போன்றவை வழங்கப்படுகின்றன. சேதன உரங்களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படுகின்றது.

சேதன உரங்களை திண்ம உரம் மற்றும் திரவ உரம் என இரண்டு வகைப்படுத்தலாம். பச்சை இலைகள், காய்ந்த சருகுகள், வைக்கோல், ஆட்டு எரு, மாட்டு எரு, கோழி எரு போன்றவற்றின் மூலம் தயாரிக்கப்படுகின்ற திண்ம உரத்தினை மண்ணுக்குள் பயன்படுத்த முடியும். மீன் கழிவுகள், பழக்கழிவுகள், மண்புழு, வேப்பம் விதைகள் மற்றும் இலைகளில் இருந்து பெறுகின்ற திரவத்தினை பயன்படுத்தி தயாரிக்கின்ற திரவ உரத்தினை தாவரங்களின் மீது தெளிக்க முடியும்.



சேதன பசளையினை குழியியல் முறை, குவியல் முறை, பீப்பாய் முறை மற்றும் கூட்டு முறை போன்ற நான்கு முறைகளில் தயாரிக்க முடியும். எமது சூழலில் சேருகின்ற கழிவுப் பொருட்களை சேதனப் பசளையாக மாற்றுவதன் மூலம் சூழல் மாசு தடுக்கப்படுகின்றது.

மிகக் குறைந்த செலவில் சேதன உரங்களை தயாரித்து பயன்படுத்துவதற்கு இப்போதாவது சிந்தித்து மீண்டும் இயற்கைக்கு திரும்புவோம்.

*தொகுப்பு:*

*செல்வி. திருச்செல்வம் தர்ஷினி*
*கிராம உத்தியோகத்தர்*
*பிரதேச செயலகம்*
*நாவிதன்வெளி*



# வெறிநாய் நோயை ஒழிப்போம்

Compiled by:
Dr MBM. SILMY
(MBBS, MSLMA, MSLAGM)
MOIC/PMCU MAVADIPALLI

வெறிநோய் என்பது மைய நரம்பு மண்டலத்தைப் (Central Nervous System) பாதிக்கக்கூடிய ஒரு வைரஸ் நோய் ஆகும். இது நோய்த்தொற்றுள்ள பாலூட்டிகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவுகிறது. இதன் அறிகுறிகள் தோன்றியவுடன் நோய் பெரும்பாலும் உயிருக்கு ஆபத்தானதாக மாறிவிடும்.

## நோய் பரவும் முறை

வெறிநோய் என்பது வீட்டு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகளைத் தாக்கும் ஒரு விலங்கு வழி வைரஸ் நோய் (Zoonotic Viral Disease) ஆகும்.

இது நோய்த்தொற்றுள்ள விலங்குகளின் எச்சிலுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதன் மூலம் மற்ற விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் பரவுகிறது.

கிட்டத்தட்ட எப்பொழுதும் இது ஒரு விலங்கு கடிப்பதன் மூலமே பரவுகிறது. மேலும் ஒரு வெறிநோய் தாக்கிய விலங்கு ஒருவரைக் கீறினால் அல்லது அதன் எச்சில் ஒருவரின் காயம்பட்ட தோலுடன் தொடர்பு கொண்டாலும் கூட வெறிநோய் பரவலாம்.

நோய்த்தொற்று ஏற்பட்டதற்கும் அறிகுறிகள் தோன்றுவதற்கும் இடையேயான கால அளவு மாறுபடும். மனிதர்களுக்கு இது சராசரியாக இரண்டு முதல் பன்னிரண்டு வாரங்கள் ஆகும். இருப்பினும் ஒரு வருடத்திற்கும் மேலான அடைகாப்புக் காலங்கள் (Incubation Periods) கூட பதிவாகியுள்ளன.

ஒருவரிடமிருந்து மற்றவருக்கு வெறிநோய் பரவுவது என்பது மிகவும் அரிது. ஆனாலும் இந்நோயால் பாதிக்கப்பட்டவரின் எச்சில் வெளிப்படுவதைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வெறிநோயால் பாதிக்கப்பட்டவர்களின் உறுப்புகளை (Tissues) மாற்று அறுவை சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது.

## நோயின் தாக்கம்

வெறிநோய் உலகம் முழுவதும் உள்ள அனைத்துக் கண்டங்களிலும் பரவியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் 55,000 இற்கும் மேற்பட்டோர் வெறிநோயால் இறக்கின்றனர். மனிதர்களுக்கு ஏற்படும் வெறிநோய் இறப்புகளில் 95% இற்கும் மேல் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் நிகழ்கின்றன. பெரும்பாலான மனித இறப்புகள் வெறிநாய் கடித்ததன் விளைவாகவே ஏற்படுகின்றன. நாய்க் கடிக்கு ஆளாகும் நபர்களில் 30% முதல் 60% வரை 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளே ஆவர். இதன் அறிகுறிகள் தோன்றிய பின், இது கிட்டத்தட்ட 100% மரணத்தை ஏற்படுத்தும். எனினும் இந்த நோய் 100% தடுக்கக்கூடியதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில், வெறிநாய் நோயை ஒழிப்பதற்கான தேசிய முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) தரவுகளின்படி வெறிநாய் நோய் தடுப்பு நடவடிக்கைகளில் இலங்கை தென் கிழக்குகாசியப் பிராந்தியத்திலேயே முன்னோடியாகத் திகழ்கிறது.

**மரணங்கள் குறைப்பு:** 1970களின் நடுப்பகுதியில் ஆண்டுக்கு 377 மனித மரணங்கள் பதிவான நிலையில் பல தசாப்த கால முயற்சிகளின் விளைவாக அண்மைய ஆண்டுகளில் வருடாந்த சராசரி மரணங்கள் 25 முதல் 31 ஆகக் குறைந்துள்ளன.

**கடி சம்பவங்கள்:** இருப்பினும் நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 250,000 விலங்குக் கடி சம்பவங்கள் இடம்பெறுவதாக மதிப்பிடப்படுகின்றது. இதில் 100,000 இற்கும் அதிகமானவர்கள் அரச மருத்துவமனைகளில் இலவசமாக கடிக்குப் பிந்தைய தடுப்பு சிகிச்சையைப் பெற்றுக்கொள்கின்றனர்.

**தாக்கப்பகுதி:** பரிசோதனைக்குட்பட்ட விலங்குகளில் சுமார் 80% நாய்களே வெறிநோய் தொற்றுக்கு காரணமாக உள்ளன.

குறிப்பாக மேல் மற்றும் தென் மாகாணங்களில் (கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மாவட்டங்கள்) வெறிநோய் பரவல் அதிகம் பதிவாகியுள்ளது.

**தேசிய இலக்கு:** இலங்கை சுகாதார அமைச்சு, WHO ஆதரவுடன் "ஒரு சுகாதார அணுகுமுறை" (One Health Approach) மூலம் 2022-2026 தேசிய மூலோபாயத் திட்டத்தை வகுத்துள்ளது. இதன் இலக்கு 2025ஆம் ஆண்டிற்குள் நாய்கள் மூலம் மனிதர்களுக்கு ஏற்படும் வெறிநோய் மரணங்களை பூஜ்யமாக்குவதே ஆகும். இது உலகளாவிய 2030 இலக்குக்கு முன்னதாக அடைய முற்படும் இலக்காகும்.

**வெறிநாய் நோயின் அறிகுறிகள்:** மனிதர்கள் மற்றும் விலங்குகளில் வெறிநாய் கடித்த பின் அறிகுறிகள் தோன்றுவதற்கு சில வாரங்கள் முதல் பல மாதங்கள் ஆகலாம். ஆனால் அவை தோன்றியதும் மரணம் நிச்சயம்.

## விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு ஏற்படும் அறிகுறிகள்

**ஆரம்பக் கட்டம்:** அமைதியாக ஒளிந்திருத்தல், எரிச்சல், சோர்வு.

**ஆரம்பக் கட்டம்:** காய்ச்சல், தலைவலி, காயம்பட்ட இடத்தில் கூச்ச உணர்வு, குமட்டல்.

**உற்சாகக் கட்டம் *(Furious Rabies)*:** ஆக்ரோஷம், கட்டுப்பாடின்றி கடித்தல், அதிக எச்சில் வடிதல்.

**நரம்பியல் கட்டம்:** குழப்பம், தண்ணீரைப் பார்த்தால் பயப்படுதல் (Hydrophobia), விழுங்குவதில் சிரமம், வலிப்பு, பக்கவாதம்.

**பக்கவாதக் கட்டம்:** கால் பலவீனம், சமநிலை இழத்தல், எழுந்து நிற்க முடியாமை, மரணம்.

**இறுதிக் கட்டம்:** சுவாச செயலிழப்பு, கோமா, மரணம்.

## கடிக்கும்போது செய்ய வேண்டிய உடனடி முதலுதவி

* விலங்கு கடித்தால் மரணத்தைத் தவிர்க்க, கடிக்குப் பிந்தைய தடுப்பு சிகிச்சை (Post-Exposure Prophylaxis - PEP) மிக அவசியம்.

* கடித்த இடத்தை சோப் மற்றும் ஓடும் நீரில் 10 நிமிடங்களுக்கு கிருமிநாசினி பயன்படுத்தி நன்கு கழுவ வேண்டும்.

* காயத்தை உலர்த்தி, பெட்டாடின் (Betadine) போன்ற கிருமிநாசினி திரவத்தை இடவும். பின்னர் மருத்துவரைச் சந்தியுங்கள்.

* தாமதிக்காமல் உடனடியாக அரச வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சையையும் தடுப்பூசித் திட்டத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். இந்தச் சிகிச்சை இலங்கையில் இலவசமாக வழங்கப்படுகிறது.

## வெறிநாய் நோயைத் தடுப்பதற்கான வழிகள்

வெறிநாய் நோயைத் தடுப்பதில் விலங்குகளைத் தடுப்பூசி போடுவதுடன் மனிதர்கள் விலங்குகளுடன் பழகும் முறையும் மிக முக்கியமானது.

**செல்லப் பிராணிகளுக்குத் தடுப்பூசி:** உங்களது நாய் அல்லது பூனையை வருடம் ஒருமுறை கட்டாயம் வெறிநாய் தடுப்பூசி மூலம் பாதுகாக்க வேண்டும். ஒரு சமூகத்தில் 80 சதவீதமான நாய்களுக்கு தடுப்பூசி போடுவது சமூகத்தைப் பாதுகாக்கும்.

**கருத்தடை:** நாய்களுக்கு கருத்தடை செய்வதன் மூலம் அவை சண்டையிடுவது மற்றும் அலைந்து திரிவது குறைந்து, வெறிநோய் பரவல் தடுக்கப்படும்.

## கடியைத் தவிர்க்க 5 விடயங்கள் (5 Don'ts)

1. **சீண்டாதீர்கள் *(Don't Tease)*:** விலங்குகளைச் சீண்டவோ அல்லது தொந்தரவு செய்யவோ கூடாது.

2. **எதிர்பாராமல் தாக்காதீர்கள் *(Don't Step)*:** விலங்குகளின் வாலை, கால்களை மிதிக்கவோ, எதிர்பாராமல் அவற்றைத் திடுக்கிடச் செய்யவோ கூடாது.

3. **சண்டையைத் தடுக்காதீர்கள் *(Don't Split)*:** நாய்ச் சண்டையை வெறுங்கையால் பிரிக்க முயற்சிக்காதீர்கள்.

4. **உணவைப் பறிக்காதீர்கள் *(Don't Take Away)*:** சாப்பிடும்போதோ அல்லது விளையாடும்போதோ நாயின் உணவையோ, பொம்மையையோ எடுக்காதீர்கள்.

5. **தாயையும் குட்டிகளையும் தொடாதீர்கள் *(Don't Touch)*:** தாயுடன் இருக்கும் நாய்க்குட்டிகளைத் தொட வேண்டாம்.

உங்களது ஒத்துழைப்புடன், வெறிநாய் மரணங்கள் இல்லாத நாடாக இலங்கையை உருவாக்க முடியும். விழிப்புணர்வுடன் இருப்போம், தடுப்பூசி போடுவோம், உயிர்களைப் பாதுகாப்போம்.

# குப்பைத்தொட்டி



சிறுகதை

புழுதித் துகள்களால் புடை சூழ்ந்த அந்த இடத்தின் மறுபக்கம் கண்களைக் கசக்கிய படி ஒரு சிறுமி புன்னகைத்தாள். அவளைப் பார்க்கையில் கந்தல் ஆடை, வாரிப் பின்னல் இடாத கூந்தல், பசியால் சுருங்கிய முகம் ஆனால் அதில் ஒரு பாவமற்ற புன்னகை. விழிகள் சோகத்தால் யாசிக்கின்றன. முகமோ கபடமில்லா ஒளியைச் சிந்துகிறது. அந்த களங்கம் இல்லா வதனம் பல வலிகளை உணர்த்துகிறது.

ஒருவேளை ஒரு முழு நாளாகக் கூட அவள் எதையும் உண்ணவில்லை போலும். விழிகள் கூர்மையாய் மங்கிய குப்பைத்தொட்டியில் எதையோ தேடின. கரங்கள் விரைவாய் அசைந்தன. எச்சிலைகளில் கூட மிச்சம் எதுவும் இல்லை. ஆனால் அவள் தளரவில்லை மண்ணில் சிதறிய துகள்களிலும் ஏதாவது கிடைக்குமோ என்கிற நம்பிக்கையுடன் தேடிக்கொண்டிருந்தாள்.

அவள் கண்கள் பக்கத்து தேயிலைக் கடையை நோக்கின. அங்கே வேலைசெய்பவன் வியர்வையோடு துப்புரவு செய்து குப்பைத் தொட்டியில் கழிவுகளைப் போட்டுக்கொண்டு இருந்தான். அதிலும் சாப்பிட ஏதுமில்லை என்பதை உணர்ந்ததும், சிறுமியின் முகத்தில் ஏக்கம் பொங்கியது. இறுதியில் தன்னிடம் இருந்த தைரியத்தைக் குவித்து கடைக்காரனை நோக்கிச் சென்றாள். "அண்ணா… பசிக்குது. ஏதாவது சாப்பிட கொடுங்க…" என்றாள் மெதுவாக.

அவளது குரல் காற்றில் கலந்தது. ஆனால் கடைக்காரனின் மனதில் அது ஒலிக்கவில்லை. "ச்சீ… போ! காலையிலேயே வந்து உயிரை வாங்கற!" என்று கடுமையாகக் கத்தி அவளைத் துரத்திவிட்டான்.

அவளின் கண்களில் நீர் வடிந்தது. ஏமாற்றம், பசி, பயம் எல்லாம் கலந்த கண்ணீராக அவளது

கன்னங்களில் வழிந்தது. திரும்பிப் பார்த்தவாறே, "யாராவது எனக்கு சாப்பிட தரமாட்டாங்களா?" என்ற ஏக்கத்தோடு அவள் மெதுவாக நடந்தாள். தெருவோரம் சென்று ஒரு மூலையில் அமர்ந்தாள். கால்களைச் சுற்றிக் கட்டிக்கொண்டு கதறி அழுதாள் தன் வயிற்றுப் பசிக்காக. அந்த அழுகை காற்றையும் காயப்படுத்தும் அளவுக்கு வேதனையாய் இருந்தது. அவ்வேளை, அந்த வீதியில் சென்ற ஒரு பெரியவர் அவளைக் கண்டு நின்றார். "அம்மாடி எதுக்கும்மா அழுற?" எனக் கனிவோடு கேட்டார்.

அவள் தலைக்குனிந்தாள், மௌனமாய் நின்றாள். சொல்ல ஒன்றிருந்தும் சொல்லவில்லை. அவர் உணர்ந்தாரோ என்னவோ, தன் கையில் இருந்த உணவுப் பொட்டலத்தை அவளிடம் நீட்டினார். "இதோ இதை வாங்கி சாப்பிடு" என்றார் பாசத்தோடு. அவள் அதிர்ச்சியோடு "வேண்டாம் தாத்தா" என்றாள்.

"ஏன் மா வேண்டாம் சொல்ற? பசிக்குதுன்னே சொன்னே?" என்று அவர் கேட்டார். அவள் மெதுவாகச் சொன்னாள்: "தாத்தா... எனக்காக ஒன்றைச் செய்வீங்களா?" "சொல்லம்மா தயங்காமல் சொல்லு" என்றார் அவர்.

அவள் அருகில் கிடந்த ஒரு கல்லை எடுத்தாள். அதைக் கையில் திணித்து "என்னோட கூட வாங்க" என்றாள்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் சென்ற திசையைப் பார்த்தார். பிறகு அவள் போன வழியிலே நடந்து சென்றார். இறுதியில் ஒரு பெரிய குப்பைத்தொட்டியின் அருகில் அவள் நின்றாள். அவள் கைகளை காட்டி சொன்னாள் "தாத்தா, நான் சொல்ல வர்றது இதுதான்." அவர் ஆச்சரியப்பட்டார். அவள் மெதுவாகக் கூறினாள்..

"இங்கே குப்பையை மட்டும் போடுங்கள்..." அந்த வாசகத்தை அவள் கல்லால் தரையில் எழுதச் சொன்னாள்.

அவர் எழுதிக்கொண்டிருந்தபோது, அவளது கண்களில் பசியின் வேதனை ஆனால் மனதில் மனிதத்தின் ஒளி இரண்டும் கலந்து இருந்தது. அந்த வார்த்தைகள் "இங்கே குப்பையை மட்டும் போடுங்கள்" மனதை உருக்கி விட்டது.

அதன் பொருள் வெறும் தூய்மை அல்ல. ஏழை குழந்தைகளின் வாழ்க்கையைக் குப்பைபோல் தூக்கி எறிவதை நிறுத்துங்கள் என்ற மன அழைப்பு. ஏழ்மை ஒருவரை எந்த அளவிற்கு காயப்படுத்துகிறது! சின்னஞ்சிறு பிள்ளைகள் செய்த குற்றமென்ன? பசி அவர்களது குற்றமா? மனிதன் மனசாட்சியைக் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டால் இன்னும் எத்தனை குழந்தைகள் இவ்விதம் கதற வேண்டியிருக்கும்?

-கயல்




பு. புவிராஸ் (DO)
த. சிவானந்தன் (DO)
கி. யோகலிங்கம் (CMSO)

# பக்கவாத நோய் பற்றிய ஓர் விழிப்புணர்வு

பக்கவாதம் என்பது மக்களுக்கு பெருந்தொல்லையைக் கொடுக்கின்ற நோயாகும். அதாவது ஆங்கிலத்தில் இதனை **Paralysis** என்று அழைப்பார்கள். **Heart Attack** போன்றே இதுவும் மனிதனை இறப்பின் இறுதி நிலைக்கு கொண்டு செல்வதாகும். **Heart Attack** என்பதிலிருந்து சிறிது வித்தியாசப்பட்டு இறவா நிலைக்கு முன்னர் செயலிழப்பு நிலைக்கு மனிதனைத் தள்ளி சாதாரண நிலைக்குக் கொண்டு வரும், அல்லது இறப்பை ஏற்படுத்துவதாகும். இதனால் பெரும்பாலும் நோயாளி மற்றொருவருக்கு சுமையாக எந்நேரமும் இருந்து கொண்டிருப்பது இங்கு தவிர்க்க முடியாததாகும். இவ்வாறான இந்நோயை வராமல் தடுக்கவும், நோய் வந்தவர்கள் விழிப்பாக இருக்கவும் **World Stroke Day October 29**ஆந் திகதி அனுட்டிக்கப்படுகின்றது.

இந்த பக்கவாதம் **(Stroke)** முற்றுமுழுதாக மூளையுடன் சம்பந்தப்பட்ட நோயாகும். மூளைக்கு செல்கின்ற இரத்தம் தடைப்படுவதினால் ஏற்படுகின்றது. அதாவது மூளைக்கு இரத்தம் செல்ல முடியாத பகுதி இடப்பக்கமா அல்லது வலப்பக்கமாக என்பதைப் பொறுத்து பாதிப்பின் வெளிப்பாடு நோயாளியின் முகத்தில், கையில், காலில், தென்படும். பாதிக்கப்பட்டவரின் பாதிப்பின் தன்மையின் அடிப்படையில் மூளைக்குச் செல்லும் பாதையில் இரத்தக்கட்டு அல்லது இரத்தக்கசிவு என்பதனை முதலில் **Scan** செய்வதன்மூலம் கண்டறியப்படல் வேண்டும். அதற்கேற்றவாறு சிகிச்சைகள் வேறு வேறு அடிப்படையில் வழங்கப்படும். அதாவது மேலே குறிப்பிடப்பட்டதைப் போல் மூளைக்கு இரத்த ஓட்டம் சரியாகப் போகவில்லை என்றால் அதை **Ischemic Stroke** என்று கூறுவார்கள். மற்றுமொரு தாக்கமும் உண்டு அதாவது மூளையில் இரத்தக் கசிவை ஏற்படுத்தல் **Hemorrage Stroke** ஆகும்.

இவை இரண்டுமே **brain** இல் ஏற்படும் **Attack** தான். இவை ஏற்படும் நோயாளியை வெகு விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் முக்கியமானதாகும். இந்நோய் மூலம் தாக்கப்படுபவருக்கு **symptoms** ஏற்பட்டு **04** மணித்தியாலங்களுக்குள் சிகிச்சையளிக்கப்படல் வேண்டும். அச்சிகிச்சையின்போது நோயாளிக்கு **Brain Angiogram** செய்யப்படல் வேண்டும். இவ்வாறு நாம் விரைவாக செயற்படுவதற்கு நம்மோடு இருப்பவருக்கு **Paralysis** தான் வந்து விட்டது என்பதை அடையாளங் கண்டு கொள்வது முக்கியமாகும். அவ்வாறு அவரை அடையாளங் கண்டு கொண்டால் தான் வீட்டில் எந்த முதலுதவியைச் செய்வது என்று நேரத்தை வீணடிக்காது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியும்.

இவ் **Stroke** இனைப் பற்றி உலக சுகாதார நிறுவனம் **(WHO) 4** பேரில் ஒருவருக்கு **Stroke** வருமென கூறுகின்றது. இதனை எவ்வாறு அடையாளங் காணுவது என்பது பற்றி கூறும் போது **Be Fast** என்ற சொற்றொடரினூடாகத் தருகின்றது.

அடையாளப்படுத்துவதற்கு பின்வரும் விளக்கம் விபரமானதாக இருக்கும். (WHO)

**01. B-BALANCE - நிலை தளம்பாமல் நடத்தல்.**

**02. E-EYES - கண் பார்வை சரியாக இருத்தல், மங்கலாகக் கூடாது.**

**03. F-FACE - முகம் சரியாக ஒருபக்கமாகச் சாராமல் இருத்தல்.**

**04. A-ARM - கை கால்கள் சரியான நிலையில் இருத்தல்.**

**05. S-SPEECH- பேச்சு சரியாகத் தளம்பல் இல்லாமல் இருத்தல்.**

**06. T-TIME - மேற்குறிப்பிட்ட B,E,F,A,S இல் எந்தவொரு மாற்றத்தைக் கண்டாலும் நேரத்தை வீணடிக்காமல் உடனடியாக வைத்தியசாலைக்கு விரைவாகச் செல்லுதல் வேண்டும்.**

இவ்வளவு விரைவாக செல்வதன் நோக்கம் பாதிக்கப் பட்டவரின் மூளைக்கு விரைவாக இரத்தம் செல்ல வில்லையானால் தாமதமாகின்ற ஒவ்வொரு விநாடிக்கும் மூளையில் 30 ஆயிரம் செல்கள் செத்தழிகின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன. எனவே, **Brain Attack** என்பதை துரிதமாக அடையாளப்படுத்துவது நோயாளியைக் காப்பாற்றுவதில் முக்கியமாகின்றது.





மேலும் **Brain** இல் **Blocking (Hemmorage Attack)** ஏற்படுவதற்கான முக்கிய காரணம் **High Blood Pressure (B/P)** ஆனது உயர்வாக காணப்படுவது. இதன் காரணமாக மூளைக்கு இரத்தம் கொண்டு செல்லும் நரம்புகளில் வெடிப்புகள் ஏற்படும். இதனால் **Bleeding** ஏற்படும். அநேகமாக தற்போதைய மருத்துவ உலகின் முன்னேற்றகரமான ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மூலமாக இவை அனைத்திற்கும் தீவிர சிகிச்சைகள் உண்டு என்று சொல்லப்படுகின்றது. அதாவது மூளைக்கு இரத்தம் செல்வது தடைப்பட்டால் உடனடிச் சிகிச்சையாக சிலருக்கு **Medicine** மூலமும், சிலருக்கு அறுவைச் சிகிச்சை மூலமும் தீர்வு காணலாம். தாமதம் தான் அதற்கு எதிர்வினையான நடவடிக்கையாக அமையும்.

**Block Baster** என்னும் முறை மூலம் நரம்பில் **Injection** கொடுத்து நரம்பில் ஏற்பட்ட **Block** இனைச் சரி செய்து விடலாம். எனவே எமது மூளையை அல்லது மற்றவரின் மூளையை நாம் **Brain Attack** இலிருந்து துரிதமாக காப்பாற்ற வேண்டுமானால் மேலே கூறப்பட்ட **Symptoms** களை அடையாளம் கண்டு அதாவது **B** - நடையில் **Balance** இல்லாமல் தளம்பல் ஏற்படுதல், **E** - கண் பார்வை இரண்டாக தெரிதல், **F** - முகம் கோணி ஒருபக்கம் இழு பட்டுச்செல்லுதல், **A** - கை கால்கள் சரியான நிலையில் இல்லாமல் இருத்தல், **S** - பேச்சுகள் தளம்பி, உளறல் நிலைக்கு வருதல், இவைகளை நாம் சரியாக அவதானித்து நம்மை அல்லது மற்றவரை நேரத்திற்கு **T - 04** மணித்தியாலங்களுக்குள் கொண்டு சேர்ப்பதனை **First Aid** முதலுதவியாகக் கொண்டு இதன் பாரிய தாக்கத்திலிருந்து தப்ப வைத்துக் கொள்ளலாம்.

# VETO அதிகாரமும் இந்தியாவுக்கு சவாலான விடயங்களும் அதன் இராஜதந்திர நகர்வுகளும்



ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர அங்கத்துவம் தரப்பட வேண்டும் என்று மிக நீண்ட காலமாகவே கோரிக்கை விடப்பட்டுக் கொண்டே வருகின்றது. சமீபத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டானியோபுட்ரஸ் அவர்கள் ஒரு கருத்தாடலின்போது 1945ஆம் ஆண்டின் பழமையான விதிகளோடு இயங்கும் காலாவதியான இவ்வமைப்பை மாற்ற வேண்டும் என்பதோடு புதிய உறுப்பினர்கள், புதிய விதிகளுடன் பாதுகாப்பு கவுன்சிலை உருவாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார், மேலும், இந்தியா போன்ற நாடுகள் இன்று உலகின் மிக வலுவான நாடுகளாக உயர்ந்துள்ளன. அவ்வாறான நாடுகளுக்கு Veto அதிகாரத்தை வழங்கி அவைகளை முன்னிலைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் ஐ.நா மீது எழுந்துள்ள ஒரு தலைப்பட்ச முடிவுகள் எடுக்கும் நிறுவனமாக உள்ளது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் களையப்படும் அல்லது குறையும் என்றும் கோடிட்டுக் காட்டினார்.

Veto அதிகாரம் அதை வைத்திருக்கும் நாடு ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்கப்படும் எந்த தீர்மானத்தையும் நிறுத்திவிடும் சக்தி, மற்றைய எந்தநாடுகள் ஒப்புக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் அந்த ஒரு நாடு சொல்வதே இறுதி முடிவாகும். இதனடிப்படையில் தற்போது ஐ.நா சபையில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளுக்கே Veto அதிகாரம் உள்ளது. அதனால்தான் அமெரிக்கா பிரிட்டன் போன்ற நாடுகள் தாங்கள் சக்திவாய்ந்தவர்கள் என்று கருதுகின்றனர்.

ஐ.நாவின் உயர் அதிகாரிகள் மட்டத்திலிருந்து கூட இப்போது இந்தியா போன்ற நாடுகளுக்கு Veto அதிகாரம் வழங்கப்படல் வேண்டும் என்பதில் திடமாக உள்ளனர் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. உண்மையிலேயே நன்மைகள் பற்றிச் சிந்திக்கின்ற பத்துப் பேர்கள் இருக்கின்ற ஒரு குழுவிலே 11ஆவது ஆளாக அதை எதிர்க்கின்ற ஒருவர் இருந்து கொண்டே இருப்பார் என்பது உறுதி. அந்த வகையில் அந்த 11ஆவது இடத்தைப் பிடித்துக் கொண்டது துருக்கி என்கின்ற நாடாகும். இந்தியாவுக்கு Veto Power என்கின்ற விவகாரம் உரத்து ஓங்கிய வேளை தனது எதிர்ப்பினை வெளியிட்டது துருக்கி.

அந்த வகையில் இந்தியாவினை சாடி பாகிஸ்தானுக்கு வலுச்சேர்க்கும் வகையில் துருக்கியின் பிரதிநிதி மீண்டும் காஷ்மீர் பிரச்சினை என்கின்ற துருப்பிடித்த கத்தியை உயர்த்திக் காட்டினார். காஷ்மீர் பிரச்சினை நியாயமான முறையிலே இந்தியாவினால் தீர்க்கப்படல் வேண்டும் என்று Veto Power பற்றிய விவாதங்கள் சூடு பிடித்த வேளையிலே மிக ஆக்ரோசத்துடன் கூறி முழுவதுமாக இந்தியாவிற்கு எதிராக மூன்று விடயங்களை முன்வைத்தார்.

1. இந்தியாவில் சிறுபான்மையினர் ஒதுக்கப் படுகின்றார்கள்.

2. இந்தியா தனது அண்டை நாடுகளுடன் உறவை மேம்படுத்தத் தவறுகின்றது.

3. அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளின் விதிகளை இந்தியா பின்பற்றவில்லை. இது உலகில் பரவலாக பதற்ற நிலைகளை உருவாக்குகின்றது.

இந்தப் பிரச்சினைகளை ஆதாரமாகக் காட்டி பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை இந்தியாவிற்கு பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம் வழங்கப்படக்கூடாது என்று வாதிட்டது. இது இந்தியாவின் பாதையைத் தடுக்கவும் அதனை அவமானப்படுத்தவும் துருக்கி கையிலெடுத்த திட்டமிட்ட

சூழ்ச்சி நடவடிக்கையாகும். ஆனால் இவ்விடத்தில் துருக்கி ஒன்றை மறந்து விட்டதுபோல் இருந்தது. முன்னர் இருந்த இந்தியா அல்ல இப்போது அதன் நிலை வேறு. அதற்கமைவாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரான கலாநிதி ஜெய்சங்கர் அவர்கள் மிகத் தெளிவான பதிலடியை வழங்கினார் என்றே சொல்ல வேண்டும்.

பாகிஸ்தான் என்கின்ற நாடு பயங்கரவாதத்தை உலகில் பரப்பி உலக ஸ்திரத்தன்மையைச் சீர்குலைக்கும் நாடு என்றும் துருக்கி என்கின்ற நாட்டின் பெண்கள் உரிமைகள் மறுப்பு, பாதுகாப்பு இன்மை எனும் விடயங்களைச் சுட்டிக்காட்டி உலகிற்கு நினைவூட்டினார். கண்ணாடியில் உங்கள் முகத்தை நீங்கள் பாருங்கள். அதன் பின்னரே மற்றவர்களுக்கு உங்கள் அறிவுரைகளை வழங்குங்கள் என்று அடித்துக் கூறினார். தொடர்ந்து அவர் கூறும் போது துருக்கியின் வாசலிலுள்ள ஆர்மேனியர். கிரேக்கர், பிற கிறிஸ்தவ சமூகங்கள் எதிர்கொண்ட கஷ்டங்களுக்கு வரலாறே சாட்சி என்று வெளிப்படையாகக் கூறினார்.

ஜெய்சங்கரின் அசாத்தியமான துருக்கிக்கெதிரான எதிர்வாதமானது இந்தியாவின் நியாயபூர்வமான இராஜதந்திர செயற்பாடாக அமைந்து காணப்பட்டது. உங்கள் வேலை உங்கள் நாட்டின் பிரச்சினைகளைச் சொல்வதே தவிர பிற நாட்டினை குற்றம் சொல்வது அல்ல என்றும் குறிப்பிட்டார். மேலும் இதுவே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை என்றும் கூறினார். ஜெய்சங்கரின் இந்தப் பதிலிலிருந்து கருத்தில் கொள்ளப்பட வேண்டியது இந்தியாவை யாரும் எளிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள் என்பதாகும்.

இருந்தாலும் இன்றும் இந்தியாவிற்கு சவாலான விடயங்களாக பார்க்க வேண்டிய விடயங்களில் சில மேற்கத்தேய நாடுகள் கூட இந்தியாவிற்கு இந்த அதிகாரம் கிடைத்து விடக்கூடாது என்று எண்ணுகின்றார்கள். அந்தவகையில் இத்தாலி, ஜெர்மன், ஜப்பான் போன்ற பல ஐரோப்பிய நாடுகளும் உள்ளடங்குகின்றன. ஏனெனில் ஜெர்மன், ஜப்பான் என்பன உலகின் மூன்றாவதும், ஐந்தாவதுமான பெரிய பொருளாதார நாடுகள். அதேபோன்றே இந்தியா உலகில் நான்காவது இடத்தில் உள்ளது. இப்போது இந்தியாவிற்கு ஐ.நா சபையில் Veto அதிகாரம் வழங்கினால் அவர்கள் இருவரையும் பின்தள்ளி முன்னிலைக்கு சென்றுவிடும் என்பதால் அவர்கள் இந்தியாவிற்கான எதிர்ப்புகளை தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் இணைந்து உலக அரசியலிலிருந்து ஐ.நா வின் செயற்பாடுகளிலும் மாற்றத்தை நோக்கிய பயணம் (RIC) என்ற அமைப்பின் ஊடாக புதுப்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அமெரிக்கா மற்றும் ஏகாதிபத்தியவாதிகளைச் சமாளிக்க புதிய சக்தியை உருவாக்கும் போது உலகில் புதிய அதிகார சமநிலை உருவாகிக் கொண்டிருக்கும். இந்தியாவை அரசியலில் சாணக்கியராக காட்டுவதற்கும் இந்த RIC கூட்டமைப்பு வழியை ஏற்படுத்தும். இந்தியாவும் அதற்கான காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றது. ஐ.நாவின் ஆதிக்க நாயகனாகத் தன்னைக் காட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்கா மற்றும் இணைநாடுகளின் மீதான அழுத்தங்கள் உருவாகும். அத்தோடு இம்முத்தரப்பு நாடுகள் ஒன்றிணைந்ததும், அதன் தாக்கமானது ஐ.நா பாதுகாப்பு சபைக்கு மட்டுமல்ல உலக பொருளாதாரம், எரிசக்தி விநியோக சங்கிலி பாதுகாப்பு கூட்டணிகள் அனைத்திலும் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆகவே, ஐ.நாவின் Veto அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் போராட்டத்தில் சிக்கிக் கொள்ளாமல் இந்தியா இந்த புதிய பாதையைத் தேர்ந்தெடுத்து காய்களை நகர்த்துகின்றது. இதன்மூலம் மேற்குநாடுகளின் மீது அழுத்தங்கள் அதிகரிக்கும். ஏனெனில் உலகின் அதிகார மையங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன. ஒரு காலத்தில் ஐ.நா அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்தது. உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் அவ்வாறே. ஆனால் ரஷ்யா - உக்ரேன் போருக்குப் பின்னர் இந்தக்கட்டுப்பாடு மாறிக்கொண்டு வருகின்றது. மேற்கத்தேய நாடுகளில் இருந்த அதிகாரம் இப்போது ஆசியாவின் கைகளுக்கு மாறிக்கொண்டிருக்கின்றது. இதன்மூலம் உலகின் ஒரு முக்கிய சக்தியாக ஆசியாவின் இந்தியா உருவெடுக்கும், ஒரு புதிய சக்தி வட்டாரம் உருவாகும் இதில் ஐ.நாவின் Veto அதிகாரம் என்பது ஒரு செல்லாக்காசாகக் கூட சிதைந்து உருமாறிப் போகலாம்.

-கியோ

# 21 ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கான வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் தம்மை மாற்றிக் கொள்வதற்கான மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியம்

ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் 5ஆம் திகதி, உலகம் முழுவதும் உள்ள ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, மற்றும் சமூகத்தில் அவர்களால் ஏற்படுத்தப்படும் விளைவுகள் என்பவற்றை கௌரவிக்கும் நாளாக உலக ஆசிரியர் தினத்தை கொண்டாட உலகின் அனைத்து நாடுகளும் முன்வந்துள்ளன. கொண்டாட்டங்கள் மற்றும் கௌரவிப்புகளுக்கு அப்பால், இந்த நாள் ஆசிரியர்களுக்கும் தமது நடிபங்கு குறித்து சிந்திக்க ஒரு வாய்ப்பை வழங்குகிறது. 21ஆம் நூற்றாண்டின் சிக்கலான சவால்களை எதிர்கொள்ளக்கூடிய மாணவர்களை உருவாக்கவும் திறம்பட வழிநடாத்தவும் ஆசிரியர்கள் எவ்வாறு தொடர்ந்து பரிணமிக்க முடியும்? இதற்கான பதில் புதிய திறன்களைப் பெறுவதில் மட்டுமல்ல, மிக முக்கியமாக, சூழ்நிலைக்கு ஏற்ப தம்மைத் தகவமைத்துக் கொள்ளல், மாணவர்கள் மீதான உண்மையான அக்கறை மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலில் ஈடுபட வேண்டுமென்ற ஆழமாக வேரூன்றிய ஆசை போன்ற விடயங்களின் கலவையான மனப்பான்மையை வளர்ப்பதிலும் தங்கியுள்ளது.




*1. வளர்ச்சி மனநிலையுடன் மாற்றத்தைத் தழுவுதல்*

21ஆம் நூற்றாண்டு நிலையான மற்றும் விரைவான மாற்றத்தால் நிறைந்திருக்கிறது. புதிய தொழில்நுட்பங்கள், உலகளாவிய தொடர்பு மற்றும் மாறிவரும் சமூக விதிமுறைகள் நாம் வாழும் மற்றும் கற்றுக்கொள்ளும் விதத்தை மாற்றியமைக்கின்றன. அத்தகைய சூழலில், மாற்றத்தை எதிர்க்கும் நிலையான மனநிலைகளுக்கு அப்பால் ஆசிரியர்கள் நகர வேண்டும். அதற்குப் பதிலாக, ஊக்கம், விடாமுயற்சி மற்றும் படைப்பாற்றல் மூலம் திறன்களையும் புத்திசாலித்தனத்தையும் வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை கொண்ட வளர்ச்சி மனநிலையை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் .

வளர்ச்சி மனப்பான்மை கொண்ட ஒரு ஆசிரியர், சவால்களை தடைகளாக அல்ல, வாய்ப்புகளாகவே பார்க்கிறார். புதிய கல்வித் தொழில்நுட்பங்கள் அல்லது கற்பித்தல் முறைகள் அறிமுகமாகும்போது, இந்த ஆசிரியர்கள் அவற்றை அச்சத்துடன் அல்லாமல் ஆர்வத்துடன் ஆராய்கின்றனர். தாங்களும் கற்பவர்கள் என்பதையும், தொழில்முறை வளர்ச்சி ஒருபோதும் முடிவடையாது என்பதையும் அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். இந்த அணுகுமுறை அவர்களின் சொந்த கற்பித்தல் நடைமுறைகளை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், நிச்சயமற்ற எதிர்காலத்தை வெற்றிகொண்டு கடந்து செல்வதற்கு அவசியமான திறன்களாக நெகிழ்ச்சி மற்றும் தகவமைப்புத் திறன்கள் வேண்டப்படுகின்றன என்பதையும் அவர்களின் மாணவர்களுக்கு உதாரண மாதிரியாகக் காட்டுகிறது.

*2. பரிவு மற்றும் உணர்வுசார் நுண்ணறிவை வளர்த்தல்*

இன்றைய கற்பவர்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு டிஜிட்டல் மயமாக்கத்தின் மூலமான தகவல் சுமை முதல் எதிர்காலத்தைப் பற்றிய கவலை வரை உணர்ச்சி மற்றும் சமூக ரீதியான பல சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆசிரியர்கள் இனி கல்வி புகட்டுவதில் மட்டுமே கவனம் செலுத்த முடியாது அவர்கள் மாணவர்களின் உணர்ச்சி சார்ந்த நல்வாழ்வையும் வளர்க்க வேண்டும். இதை திறம்படச் செய்ய, ஆசிரியர்கள் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வது, முகாமை செய்வது

போன்றவற்றில் தேர்ச்சியடைய வேண்டும் என்பதுடன் அவர்களின் சொந்த உணர்வுகளுக்கும் அவர்கள் கற்பிக்கின்ற மாணவர்களின் உணர்வுகளுக்கும் பரிவுடன் பதிலளிக்கும் திறனையும் வலுப்படுத்த வேண்டும்.

ஒரு பரிவுள்ள ஆசிரியர் நம்பிக்கை மற்றும் மரியாதை கொண்ட வகுப்பறை கலாச்சாரத்தை உருவாக்குகிறார், அங்கு மாணவர்கள் தங்களை வெளிப்படுத்தவும் அறிவுசார்ந்து எந்த சிக்கல் நிலைகளையும் துணிந்து எதிர்கொள்ளவும் கூடியவகையில் தாம் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறார்கள். அத்தகைய சூழல் ஒத்துழைப்பு, படைப்பாற்றல் மற்றும் நம்பிக்கையை ஊக்குவிக்கிறது - மாணவர்களை மாறுபட்ட மற்றும் ஆற்றல்மிக்க பணியிடங்களில் செழித்து முன்னேறச் செய்ய உதவும் குணங்கள் மற்றும் சிறப்பான உணர்வுசார் நுண்ணறிவு கொண்ட ஆசிரியர்களிடமிருந்து ஒவ்வொரு மாணவரும் வித்தியாசமான அறிவையும் திறன்களையும் கற்றுக்கொள்கிறார்கள் அத்துடன் தனியாள் வேறுபாட்டை மதிக்கவும் கற்றுக் கொள்கின்றான்ர். ஆசிரியர்கள் அனைத்து மாணவர்கள் மீதும் பரிவைக் காட்டுவதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கும் கற்றல் அனுபவம் மற்றும் நியாயத்தன்மை ஆகியவை கற்றல் செயல்முறையின் மையத்தில் இருப்பதை உறுதி செய்கிறார்கள்.

*3. பயிற்றுவிப்பாளர்கள் எனும் நிலையில் இருந்து கற்றலுக்கு வசதியளிப்பவர்களாக மாறுதல்*

பாரம்பரிய கல்வியில், ஆசிரியர்கள் அறிவின் மைய ஆதாரமாக இருந்தனர். இன்று, தகவல் எல்லா இடங்களிலும் உள்ளது - ஒரு பொத்தானைச் சொடுக்குவதன் மூலம் ஏராளமான தகவல்கள் அணுகக்கூடிய வகையில் உள்ளன. இந்த யதார்த்தத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் கற்பித்தல் அணுகுமுறையில் மாற்றம் தேவைப்படுகிறது: ஆசிரியர்கள் வெறும் அறிவைப் பரப்புபவர்களாக இருந்த நிலையை மாற்றிக்கொண்டு மாணவர்களின் கற்றலை எளிதாக்குபவர்களாக மாற வேண்டும். இப்போது அவர்களின் பங்கு மாணவர்களுக்குக் கிடைக்கும் பரந்த தகவல் வெள்ளத்தில் சரியான மையத்திற்குச் செல்லவும், கேள்வி கேட்கவும், பகுப்பாய்வு செய்யவும் வழிகாட்டுவதாகும்.

இந்த நவீன மனநிலையைக் கொண்ட ஒரு ஆசிரியர் விசாரணை, விமர்சன சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் தன்மையை ஊக்குவிக்கிறார். பதில்களை வழங்குவதற்குப் பதிலாக, மாணவர்களின் ஆர்வத்தையும் ஆய்வுகளையும் தூண்டும் கேள்விகளை எழுப்புகிறார். இன்றைய தகவல் நிறைந்த உலகில் மனப்பாடம் செய்வதை விட மதிப்புமிக்க திறன்களான ஊடக எழுத்தறிவு, நெறிமுறை பகுத்தறிவு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றில் மாணவர்கள் திறன்களை வளர்க்க அவை உதவுகின்றன. மாணவர்கள் தங்கள் கற்றலின் உரிமையைப் பெற அதிகாரம் அளிப்பதன் மூலம், ஆசிரியர்கள் அவர்களை சுயாதீன சிந்தனையாளர்களாகவும் வாழ்நாள் முழுவதும் கற்பவர்களாகவும் மாறத் தயார்படுத்துகிறார்கள்.

*4. நோக்கத்துடன் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல்*

தொழில்நுட்பம் 21 ஆம் நூற்றாண்டின் போக்கை வரையறுக்கும் அம்சங்களில் ஒன்றாகும். இது மகத்தான கல்வித் திறனை வழங்கினாலும், சிந்தனையுடன் பயன்படுத்தப்படாவிட்டால் அது மிகப்பெரிய அழிவை விளைவிக்கக்கூடியதாகவும் இருக்கலாம். தொழில்நுட்பத்தின் மீதான நேர்மறையான அணுகுமுறை என்பது அதை அச்சுறுத்தலாகவோ அல்லது கவனச்சிதறலாகவோ அல்லாமல் புதுமைக்கான ஒரு கருவியாக ஏற்றுக்கொள்வதாகும். கற்றலை மேம்படுத்துவதற்கும், படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்கும், வகுப்பறைகளை உலகளாவிய சமூகத்துடன் இணைப்பதற்கும் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்தை ஒரு பாலமாகப் பார்க்க வேண்டும்.

ஆசிரியர்கள் டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்தி கற்பித்தலைத் தனிப்பயனாக்கலாம், பல்வேறு நிலையில் உள்ளவர்களுக்கும் கல்வியைச் சென்றடையச் செய்யலாம். மேலும் கற்றல் கற்பித்தலில் எல்லைகளைத் தாண்டி ஒத்துழைப்பை ஊக்குவிக்கலாம். இருப்பினும், அவர்கள் டிஜிட்டல் பொறுப்புணர்வையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும் — நிகழ்நிலை நெறிமுறைகள், தகவல் சரிபார்ப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு பற்றி மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். நோக்கம் மற்றும் சமநிலையுடன் பயன்படுத்தப்படும்போது, தொழில்நுட்பம் கற்றலை மேலும் இலகு படுத்துவதுடன் கற்றலை அர்த்தமுள்ளதாகவும் மாற்றும்.

*5. உலகளாவிய குடியுரிமையை ஊக்குவித்தல்*

21 ஆம் நூற்றாண்டு முன்னெப்போதையும் விட ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம்,



இடம்பெயர்வு, தொற்றுநோய்கள் மற்றும் சமூக நீதி இயக்கங்கள் அனைத்தும் மனிதகுலம் எதிர்கொள்ளும் பகிரப்பட்ட சவால்களை எடுத்துக்காட்டுகின்றன. எனவே ஆசிரியர்கள் ஒரு உலகளாவிய கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் - இது மாணவர்களிடையே பரிவு, பொறுப்பு மற்றும் பன்முகத்தன்மைக்கு மரியாதை அளித்தல் ஆகியவற்றை வளர்க்கிறது.

உலகளாவிய மனநிலையைக் கொண்ட ஒரு ஆசிரியர், மாணவர்கள் தமது சமய, இன, தேச எல்லைகளுக்கு அப்பால் மனிதத்துவத்தைப் பார்க்கவும், உலகின் சுறுசுறுப்பான குடிமக்களாக தங்கள் பங்கைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறார். கலாச்சார விழிப்புணர்வு, நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய பாடங்கள் இரக்கம் மற்றும் சகிப்புத்தன்மையை வளர்க்கின்றன. ஆசிரியர்கள் இந்த விழுமியங்களை ஊக்குவிக்கும்போது, ஒற்றுமை, புதுமை மற்றும் தார்மீக ஒருமைப்பாட்டுடன் உலகளாவிய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் திறன் கொண்ட ஒரு தலைமுறையை உருவாக்க உதவுகிறார்கள்.

### 6. போட்டியை விட ஒத்துழைப்புக்கு முன்னுரிமை அளித்தல்

கல்வி நீண்ட காலமாக போட்டியுடன் தொடர்புடையதாய் இருந்து வருகின்றது - தரங்கள், தரவரிசை மற்றும் செயல்திறன் ஒப்பீடுகள் போன்றன அதன் அம்சங்களாக இருந்து வருகின்றன. ஆனால் நவீன உலகம் குழுப்பணி, தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை அதிகளவில் மதிக்கிறது. ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைகளிலும், சகாக்களிடையேயும் கூட்டுறவு மனநிலையை ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டும். இதன் பொருள் தனிப்பட்ட போட்டியை விட ஒத்துழைப்பை வலியுறுத்தும் கற்றல் அனுபவங்களை வடிவமைப்பதாகும்.

குழுச் செயற்றிட்டங்கள், சகபாடிகளுடன் இணைந்து கற்றல் மற்றும் சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதன் மூலம், ஆசிரியர்கள் மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்க்க உதவலாம். மேலும், ஆசிரியர்கள் கூட யோசனைகள், வளங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை சக ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்வது மூலம் பயனடைகிறார்கள். இதன் மூலம் அவர்களின் - தொழில்முறை வளர்ச்சியும் மேம்படுகிறது. ஒத்துழைப்பு உணர்வு மாணவர்கள் மத்தியில் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மாதிரியாகக் கொண்ட வலுவான கற்றல் சமூகங்களை உருவாக்குகிறது.

### 7. படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தை வளர்த்தல்

21ஆம் நூற்றாண்டில் ஆசிரியர்களுக்கான மிக முக்கியமான அணுகுமுறைகளில் ஒன்று படைப்பாற்றலுக்கான திறந்த தன்மை. நவீன உலகின் சவால்கள் - அறிவியல், பொருளாதாரம் அல்லது சமூகம் என எதுவாக இருந்தாலும் - புதுமையான சிந்தனையாளர்களைக் கோருகின்றன. எனவே ஆசிரியர்கள் தங்களின் மீதும் தங்கள் மாணவர்களிடமும் ஆக்கப்பூர்வமான நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இது பரிசோதனை, கற்பனை மற்றும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் கற்றல் அனுபவங்களை வடிவமைப்பதை உள்ளடக்கியது.

ஒரு படைப்பாற்றல் மிக்க ஆசிரியர் தோல்விக்கு அஞ்சுவதில்லை மாறாக, அவர்கள் அதை கற்றல் செயல்முறையின் ஒரு பகுதியாகப் பார்க்கிறார்கள். அவர்கள் மாணவர்கள் கற்றல் சார்ந்து அபாயங்களை ஏற்றுக்கொள்ளவும், புதிய

கண்ணோட்டங்களை ஆராயவும், பல்வேறு வழிகளில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தவும் ஊக்குவிக்கிறார்கள். அசல் தன்மை மற்றும் சிக்கல் தீர்க்கும் தன்மையை மதிப்பிடுவதன் மூலம், ஆசிரியர்கள் மாணவர்களை சிறந்த எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடிய புதுமையாளர்களாக மாற ஊக்குவிக்கிறார்கள்.

*8. வாழ்நாள் முழுவதும் கற்றல் என்பது ஒரு தொழில் நெறிமுறை*

ஆசிரியர்கள் தங்கள் தொழில் வாழ்க்கையின் தொடக்கத்தில் கற்றுக்கொண்ட முறைகள் மற்றும் அறிவை மட்டுமே நம்பியிருக்க முடியாத அளவுக்கு உலகம் மிக வேகமாக மாறி வருகிறது. தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு என்பது ஒரு தேவை மட்டுமல்ல - அது ஒரு அத்தியாவசிய அணுகுமுறையும் ஆகும். வாழ்நாள் முழுவதும் கற்பவர்களாக தங்களைக் கருதும் ஆசிரியர்கள் புதிய கல்விச் சவால்களுக்கு பொருத்தமானவர்களாகவும் பதிலளிக்கக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.

புதிய ஆய்வுகளில் ஈடுபடுவது, பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்வது, சகாக்களுடன் ஒத்துழைப்பது மற்றும் வகுப்பறை அனுபவங்களைப் பற்றி சிந்திப்பது அனைத்தும் தொழில்முறை வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன. இவை தொடர்ச்சியான கற்றல் கற்பித்தல் செயல்திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பணிவு மற்றும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் மாணவர்களையும் கூட இதை ஒத்த பழக்கங்களை ஏற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் பண்புகளாகவும் அமைகின்றன.

*9. நெறிமுறை மற்றும் விழுமியங்கள் அடிப்படையிலான கல்வியை ஊக்குவித்தல்*

தொழில்நுட்பம் மற்றும் போட்டியால் இயக்கப்படும் ஒரு சகாப்தத்தில், நெறிமுறை வழிகாட்டுதல் முன்னெப்போதையும் விட முக்கியமானது. ஆசிரியர்கள் நேர்மை, நியாயம், மரியாதை மற்றும் இரக்கத்தை முன் மாதிரியாகக் காண்பிக்கும் தார்மீக திசைகாட்டிகளாக இருக்க வேண்டும். நியாயம், நீதி மற்றும் பொறுப்புணர்வு குறித்த அவர்களின் அணுகுமுறைகள், மாணவர்கள் வாழ்க்கையின் தார்மீக சவால்களை எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதை ஆழமாகப் பாதிக்கின்றன. நெறிமுறைகள், சுற்றுச்சூழல் முகாமைத்துவம் மற்றும் சமூகப் பொறுப்பு பற்றிய விவாதங்கள் மூலம் தங்கள் பாடங்களில் விழுமியங்களை ஒருங்கிணைக்கும் ஆசிரியர்கள், திறமையானவர்களாக மட்டுமல்லாமல் கொள்கைகளில் பற்றுறுதி கொண்டவர்களாகவும் இருக்கும் மாணவர்களை வடிவமைக்க உதவுகிறார்கள். ஏனெனில் எதிர்காலம் பொருண்மிய முன்னேற்றத்துடன் பரிவு, மனசாட்சி என்பவற்றை சமநிலைப்படுத்தக்கூடிய தலைவர்களைக் கோரும் நிலை அமையும்.

*10. நோக்கம் மற்றும் பிரதிபலிப்பு பற்றி சிந்தித்தல்*

இறுதியாக, ஒரு ஆசிரியர் ஏற்றுக்கொள்ளக்கூடிய மிக சக்திவாய்ந்த அணுகுமுறை மாற்றம், அவர்களின் தொழிலின் நோக்க உணர்வை மீண்டும் கண்டுபிடிப்பதாகும். கற்பித்தல் என்பது ஒரு தொழில் என்று வரையறுப்பதை விட அதிகம் அர்த்தம் வாய்ந்தது. இது மனிதர்களின் வாழ்க்கையை வடிவமைக்கவும் சமூகங்களை உருவாக்கவும் இறைவனால் ஆசிரியர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு அழைப்பு. நவீன கல்வியின் அழுத்தங்களுக்கு மத்தியில், ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றலுக்கான ஆர்வத்தைத் தூண்டுதல், தமது திறனையும் மாணவர்களின் திறனையும் வளர்த்தல் மற்றும் மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கு பங்களித்தல் போன்றவற்றின் மூலமாக மகிழ்ச்சியைக் கண்டடைய வேண்டும்.

உலக ஆசிரியர் தினத்தன்று, எல்லா இடங்களிலும் உள்ள ஆசிரியர்கள் இந்த உன்னதமான பாதையை அவர்கள் ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பதைப் பற்றி சிந்திக்க ஒரு கணப்பொழுதையேனும் எடுத்துக்கொள்ள வேண்டும். 21ஆம் நூற்றாண்டின் சவால்கள் சிக்கல் நிறைந்தவை, ஆனால் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளும் நிறையவே உள்ளன. சரியான மனநிலையுடன் - திறந்த, இரக்கமுள்ள, புதுமையான மற்றும் நெறிமுறை சார்ந்த ஆசிரியர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்கள் சிக்கலான உலகில் சரியான பாதையில் செல்ல உதவும் வழிகாட்டும் விளக்குகளாகத் தொடர்ந்து இருக்க முடியும்.

**தொகுப்பு:**
**பாலசிங்கம் சஜிந்ரன்**
**பாண்டிருப்பு.**



AI AGENT DEVELOPMENT

# Ai முகவர் அது ஏன் வேறுபட்டது?

ICT UNIT, DS.NV

இன்று நாம் பயன்படுத்தும் **ChatGPT** போன்ற உருவாக்க **AI (Generative AI)** கருவிகள் ஒரு குறிப்பிட்ட கட்டளைக்கு மட்டுமே பதிலளிக்கும். நீங்கள் கேள்விகள் கேட்கிறீர்கள், அவை பதிலளிக்கின்றன. ஆனால் முகவர் **AI (Agentic AI)** என்பது ஒருபடி மேலே செல்கிறது. ஒரு மனிதனைப் போலவே, அதற்கு ஒரு இலக்கு கொடுக்கப்பட்டால், அதை அடைவதற்கான வழிகளை அதுவே திட்டமிடும், தேவையான கருவிகளைப் பயன்படுத்தும், வழியில் வரும் தடைகளைத் தானே சமாளிக்கும், தோல்வியுற்றால் அதிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளும்.

உதாரணமாக, ஒரு வழக்கமான **AI** ஒரு கிடங்கில் உள்ள சரக்குகளின் பட்டியலைக் கொடுக்க முடியும். ஆனால் ஒரு முகவர் **AI**, "அடுத்த வாரம் வரவிருக்கும் வாடிக்கையாளர் தேவையைச் சமாளிக்க, கிடங்கில் உள்ள பொருட்களை எவ்வாறு மறுசீரமைக்க வேண்டும்" என்ற இலக்கைக் கொடுத்து, பின்வரும் செயல்களைத் தன்னிச்சையாக **(Autonomously)** செய்ய முடியும்:

1. **தேவையைப் பற்றிய தரவைச் சேகரிக்கும்.**
2. **பொருட்களை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்று ஒரு வரைபடத்தை உருவாக்கும்.**
3. **கிடங்கில் உள்ள ரோபோக்களுக்குச் செயல் திட்டத்தை அனுப்பும்.**
4. **ரோபோக்களின் வேலையைக் கண்காணித்து, ஏதேனும் பிழை ஏற்பட்டால், உடனடியாக அதைச் சரிசெய்யும்.**

இந்த முழுமையான, முடிவெடுக்கும் திறன் தான் முகவர் **AI**-ஐ தொழில் துறையின் புதிய "விதி மாற்றியாக" **(Game Changer)** மாற்றியுள்ளது.

## 1. உற்பத்தியில் தன்னாட்சிப் புரட்சி (Manufacturing Automation)

உற்பத்தித்துறையில், முகவர் **AI** நேரத்தை மிச்சப் படுத்துவதோடு, பொருட்களின் தரத்தையும், உற்பத்தித் திறனையும் வெகுவாக அதிகரிக்கிறது. பாரம்பரியமாக, ஒரு உற்பத்தியாளர் தனது தயாரிப்பை மேம்படுத்த பல வாரங்கள் செலவிடுவார். ஆனால் முகவர் **AI** சில நிமிடங்களில் அதைச் சாத்தியமாக்குகிறது.

- **முன்னறிவிப்புப் பராமரிப்பு :**

தொழிற்சாலை இயந்திரங்களில் உள்ள சென்சார்கள் மூலமாக வரும் தரவுகளை **AI** முகவர்கள் தொடர்ந்து கண்காணித்து, ஒரு இயந்திரம் எப்போது பழுதடையும் என்பதைக் கணித்து, பழுது ஏற்படுவதற்கு முன்பே அதைச் சரிசெய்யும் பணியைத் தொடங்கிவிடுகின்றன. இதனால் உற்பத்தி நிறுத்தப்படுவது தவிர்க்கப்படுகிறது.

- **வடிவமைப்பு மற்றும் ஆய்வுப் பணி :**

ஒரு புதிய வாகன உதிரிபாகத்தை வடிவமைக்கும் ஒரு பொறியியலாளரின் பணியை முகவர் **AI** எளிதாக்குகிறது. முகவர் **AI**, ஆயிரக்கணக்கான வரலாற்றுத் தரவுகளையும், சோதனை முடிவுகளையும் பகுப்பாய்வு செய்து, புதிய பாகத்திற்கான மிகச் சரியான வடிவமைப்புப் பரிசோதனை

விவரங்களை (Test Case Descriptions) உடனடியாக உருவாக்கும். இது, புதிய மற்றும் அனுபவம் குறைவான பொறியாளர்களுக்கு கூட, பணிகளை 50% குறைவான நேரத்தில் முடிக்க உதவுகிறது.

இதுவரை மனிதர்கள் மட்டுமே செய்யக்கூடிய சிக்கலான திட்டமிடல் மற்றும் உத்தி வகுக்கும் பணிகளை இப்போது AI முகவர்கள் மேற்கொள்வதால், உற்பத்தித் துறையில் தன்னியக்கத் தளவாடங்கள் (Autonomous Logistics) உருவாகின்றன.

## 2. தளவாடங்கள் (Logistics) மற்றும் விநியோகச் சங்கிலியில் (Supply Chain) செயல்திறன்

விநியோகச் சங்கிலி என்பது மிகவும் நிலையற்ற மற்றும் சிக்கலான துறையாகும். சந்தை தேவை திடீரென மாறலாம், வானிலை கப்பல் போக்குவரத்தை பாதிக்கலாம், அல்லது ஒரு மூலப்பொருள் பற்றாக்குறை ஏற்படலாம். இது போன்ற சூழ்நிலைகளைச் சமாளிக்க மனிதர்களுக்குப் பல நாட்கள் தேவைப்படும். ஆனால் முகவர் AI நொடிகளில் முடிவெடுக்கிறது.

- **சுய-நிர்வாகக் கிடங்குகள் :**

கிடங்கு மேலாண்மை அமைப்புகளில் (WMS) முகவர் AI பயன்படுத்தப்படுவதால், அது சரக்குகளை (Inventory) எங்கே வைக்க வேண்டும், எப்போது மறுதிருப்பல் செய்ய வேண்டும், பொருட்களை எடுக்கும் ரோபோக்களுக்கு எப்படிச் சரியான வழியைக் காட்ட வேண்டும் போன்ற முடிவுகளைத் தன்னாட்சியாக எடுக்கிறது. இது மனித மேற்பார்வையின் தேவையை வெகுவாகக் குறைக்கிறது.

- **நெகிழ்வான விநியோகம் :**

ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் திடீரென போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டால், முகவர் AI உடனே மாற்று வழியைத் திட்டமிடுவது மட்டுமின்றி, அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தாமதம் குறித்த தகவலையும் தானாகவே தெரிவிக்கும். இதன் மூலம், விநியோக நேரம் குறைகிறது, மேலும் வாடிக்கையாளர் திருப்தி அதிகரிக்கிறது.

## 3. அறிவியல் ஆராய்ச்சியில் வேகமான கண்டுபிடிப்புகள்

புதிய மருந்துகள் அல்லது நிலையான ஆற்றல் மூலங்களைக் கண்டுபிடிப்பது போன்ற அறிவியல் ஆராய்ச்சிகள் பல ஆண்டுகள் எடுக்கும் செயல்முறையாகும். முகவர் AI இந்தச் செயல்முறையின் வேகத்தைப் பல மடங்கு அதிகரித்துள்ளது.

- **பரிசோதனைத் தன்னியக்கம் :**

அறிவியல் ஆய்வகங்களில் உள்ள AI முகவர்கள், ஒரு குறிப்பிட்ட வேதிப்பொருளை ஆராய்வது அல்லது ஒரு குறிப்பிட்ட மூலக்கூறை வடிவமைப்பது போன்ற இலக்குகளைத் தானே நிர்ணயிக்கும். அது நூலகங்களில் உள்ள மில்லியன் கணக்கான ஆய்வுக் கட்டுரைகளைப் படித்து, மிகவும் நம்பிக்கைக்குரிய சோதனையைத் தேர்ந்தெடுத்து, அதைச் செய்ய ஆய்வக ரோபோக்களுக்குக் கட்டளையிடும்.

- **தரவுப் பகுப்பாய்வு :**

முகவர் AI, மனிதர்கள் கணிக்க முடியாத சிக்கலான வடிவங்களைக் (patterns) கண்டறிந்து, அதன் அடிப்படையில் புதிய தீர்வுகளை முன்வைக்கிறது. உதாரணமாக, புதிய நானோ என்சைம்கள் (Nanozymes) அல்லது மிகவும் நீடித்த பேட்டரிப் பொருட்களைத் (Battery Composites) தேடுவதில் இது புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஹைப்பர் ஆட்டோமேஷனின் அடுத்த கட்டம்

முகவர் AI-இன் இந்த வருகை வெறும் தானியங்கிமயமாக்கலை (Automation) விட பெரியது இது ஹைப்பர் ஆட்டோமேஷன் (Hyperautomation) எனப்படும் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கம்.

ஹைப்பர் ஆட்டோமேஷன் என்பது, நிறுவனத்தின் அனைத்து துறைகளிலும் உள்ள அனைத்துச் செயல்பாடுகளையும், அதாவது உற்பத்தி வரிசையிலிருந்து நிதி முடிவெடுப்பது வரை, மனித தலையீடு இல்லாமல் ஒன்றிணைத்து நிர்வகிப்பதாகும். முகவர் AI-களின் மூலம், ஒரு நிறுவனம் தனது இலக்குகளை அடைய, தானாகவே திட்டங்களை உருவாக்கி, நிறைவேற்றி, தனது முழு செயல்பாட்டையும் தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்ள முடியும்.

வரும் ஆண்டுகளில், இந்த AI முகவர்கள் வெறுமனே கருவிகளாக இல்லாமல், நிறுவனங்களின் மிகச் சிறந்த 'குழு உறுப்பினர்களாக' செயல்படும். உற்பத்தி, தளவாடங்கள், அறிவியல் ஆகிய துறைகளில் திறமையான செயல்பாட்டு திறன் (Operational Efficiency), செலவுக் குறைப்பு (Cost Reduction) மற்றும் வேகமான கண்டுபிடிப்புகள் ஆகியவை முகவர் AI மூலம் சாத்தியமாகி வருகின்றன. இந்த மாற்றத்திற்கு தயாராகும் நிறுவனங்களே எதிர்காலப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும்.



# வாசிப்பு பழக்கத்தின் வீழ்ச்சியும் எதிர்கால விளைவுகளும்

ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு நாடாளாவிய ரீதியில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் இது தொடர்பாக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மிகப் புராதன காலத்தில் இருந்து கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரை, இலங்கை தேசத்தில் கற்றலின் இதயத்துடிப்பாக வாசிப்பு இருந்தது. புராதன காலத்தில் எழுதப்பட்ட பல்வேறுபட்ட துறைகளில் அமைந்த அறிவுசார்ந்த பொக்கிசங்கள், கதைகள் மற்றும் வரலாறுகள் தொடக்கம் அண்மைய காலத்தில் இலங்கையின் புலமையாளர்கள் மற்றும் வெளிநாட்டு அறிஞர்களின் புத்தகங்கள் வரை இலங்கை மக்களின் அறிவை மட்டுமல்ல, கற்பனை மற்றும் சுய அடையாளத்தையும் வடிவமைத்தன. இருப்பினும், இன்று அந்த இதயத்துடிப்பு குறைந்து வருவது வேதனை தருகிறது. நமது இளைஞர்களிடையே, ஒரு காலத்தில் போற்றப்பட்ட வாசிப்புப் பழக்கம் மங்கி சமூக ஊடகங்களில் நேரத்தைச் செலவிடுதல், மேலெழுந்த வாரியாக மட்டும் இணையத்தில் தகவல்களைப் பெறுதல் போன்ற மாற்றம் வேகமாக அதிகரித்து வருகிறது. இந்த வீழ்ச்சியின் எதிர்மறையான விளைவுகள் விரைவில் உணரப்படும் நிலை தோன்றும். இந்தப் போக்கு நாட்டின் எதிர்காலத்தை சிறப்பாக வடிவமைக்கும் செயற்பாட்டில் பாரதூரமான பின்னடைவை ஏற்படுத்தப்போகின்றது.

இந்தப் போக்கின் உடனடியான பாதிப்பு எதிர்கால சந்ததியினர் மத்தியில் தருக்க ரீதியான சிந்தனை அற்றுப் போவதாக அமையும். புத்தகங்கள் எப்போதுமே புலக் குவிப்பை வளர்ப்பதில் அதிக பங்களிப்பு செய்கின்றன. அவை வாசகர்களை சிந்திக்கவும், கேள்வி கேட்கவும் தூண்டுகின்றன. மறுபுறம், சமூக ஊடகங்கள் வேகம் மற்றும் எதிர்வினைக்கு வெகுமதி அளிக்கின்றன. குறுகிய காணொளிகள் மற்றும் சமூக ஊடகங்களில் வருகின்ற நிலை இற்றைப்படுத்தல்களில் மூழ்கடிக்கப்பட்டு வளர்க்கப்படும் ஒரு தலைமுறை ஆழமாகவும் சுதந்திரமாகவும் சிந்திக்கும் திறனை இழக்கும் அபாயம் உள்ளது. அக் காணொளிகள் மற்றும் நிலை இற்றைப்படுத்தல்களில் வருகின்ற துரித அபிப்பிராயங்கள் தீவிர பரிசீலனைக்கும் ஆய்வுக்கும் உட்படுத்தப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டிய விடயங்களை அவ்வாறு செய்வதில் இருந்து இளைய தலைமுறையினரைத் தடுத்து விடுவதுடன் சிறப்பான தகவலறிந்த, சிந்தனைச் செழுமை மிக்க குடிமக்களை உருவாக்க முயலும் ஜனநாயக அமைப்பிற்கும் ஆபத்தானவையாய் அமைகின்றன.

வாசிப்பு பழக்கத்தின் வீழ்ச்சியால் பலியாகப் போகும் அடுத்த விடயம் மொழி ஆகும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உட்பட எந்தவொரு மொழியிலும் ஏற்படும் தேர்ச்சி விருத்தி என்பது ஒரே இரவில் உருவாகிவிடாது. அது வாசிப்பதன் மூலமே வளர்ச்சி அடைகிறது. புத்தகங்களால் மனம் நிரப்பப்படும்போது சொற்களஞ்சியம் விரிவடைகிறது, இலக்கணம் வலுவடைகிறது, மேலும் கருத்துக்கள் மிகவும் சீராகக் கிரகித்துக்கொள்ளப்படுகின்றன. வாசிப்பு பழக்கம் குறைவான மாணவர்கள் கடிதங்கள், கட்டுரைகள் எழுதவும், நேர்காணல்கள் அல்லது அன்றாட உரையாடல்களில் கூடத் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளவும் போராடுகிறார்கள். தகவல் தொடர்பாடல் உந்து சக்தியாக மாறியுள்ள இன்றைய உலகளாவிய பொருளாதாரத்தில், இந்தப் பலவீனம் இலங்கையை பின்னுக்குத் தள்ளக்கூடும்.

வாசிப்பு பழக்கத்தின் வீழ்ச்சி காரணமாக இலங்கை மக்களின்

கலாசாரமும் ஆபத்தில் உள்ளது. இலக்கியம் என்பது ஒரு தேசத்தின் ஆன்மாவின் கண்ணாடி. அது நமது முன்னோர்களின் கதைகள், நமது மொழிகளின் தாளலயங்கள் மற்றும் நமது சமூகங்களின் விழுமியங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. இளம் இலங்கையர்கள் வாசிப்பதை நிறுத்தினால், அவர்கள் தங்கள் வேர்களுடனான தொடர்பை இழக்க நேரிடும். தன் கலாசார பாரம்பரியத்திலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு தலைமுறை தன்னை அலைக்கழித்து, அதன் அடையாளம் குறித்து உறுதியாக தெரியாத நிலையில், மற்றவர்களிடம் இருந்து பின்தள்ளப்பட்டதாக உணர வேண்டிய சூழல் உருவாகும்.

வாசிப்பு பழக்கத்தின் வீழ்ச்சியின் நீண்டகால விளைவு இன்னும் மிகப் பாரதூரமானது. படைப்பாற்றலிலும் புதுமை புனைவிலும் மிகப்பெரிய சரிவு ஏற்படும். வாசிப்பு கற்பனையைத் தூண்டுகிறது. அது புதிய சாத்தியக்கூறுகளை ஆராயவும், வெளிப்படையாய்த் தெரிவதைத் தாண்டி சிந்திக்கவும், எதிர்பாராத வழிகளில் கருத்துகளை இணைக்கவும் மனதைத் தூண்டுகிறது. சிறந்த தலைவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் கலைஞர்கள் எப்போதும் சிறந்த வாசகர்களாக இருந்துள்ளனர். இந்த சிந்தனைத் தீப்பொறி இல்லாமல் போகும்போது, இலங்கை நுகர்வுத் திறனை மட்டும் கொண்ட ஆனால் புத்தாக்கத் திறனில் மிக மோசமான ஒரு தலைமுறையை உருவாக்கும் அபாயத்தை எதிர்கொள்கிறது. புதுமைகளால் இயக்கப்படும் இந்த நூற்றாண்டிலும் ஏன் எதிர் வரவிருக்கும் நூற்றாண்டுகளிலும் இது இலங்கை தேசத்திற்கு ஒரு கடுமையான அடியாக மாறும்.

இந்த சவால்களுக்கு தீர்வு காண்பதற்கான வழி என்ன? வாசிப்பு கலாசாரத்தை மீளக் கட்டியெழுப்புவதிலேயே தீர்வு உள்ளது. பள்ளிக்கூடங்கள் தேர்வை மையமாகக் கொண்ட நூல்களுக்கு அப்பால் நகர்ந்து மகிழ்ச்சிக்காக வாசிப்பதை ஊக்குவிக்க வேண்டும். நிதி பற்றாக்குறை மற்றும் இன்னோரன்ன காரணங்களால் புறக்கணிக்கப்பட்ட நூலகங்கள் புதிய கண்டுபிடிப்புக்கான துடிப்பான இடங்களாக மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். வெளியீட்டாளர்கள் புத்தகங்களை மலிவு விலையிலும் அணுகக்கூடியதாகவும் மாற்ற வேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக விளங்கி வாசிப்பில் ஈடுபட வேண்டும். பொழுதுபோக்கு வேளைகளில் திரைகளை விட்டு விலகி வாசிப்பிற்கு மாற வேண்டும்.

வாசிப்பிற்கு தொழில்நுட்பம் எதிரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. மின் புத்தகங்கள், டிஜிட்டல் நூலகங்கள் மற்றும்



ஊடாடும் தளங்கள் போன்றவற்றால் பாரம்பரிய வாசிப்பின் தேவையை மீள்நிரப்பு செய்ய முடியும். முக்கியமான விடயம் என்னவென்றால் - நூல்களில் உள்ள வார்த்தைகளில் மூழ்கி, அவற்றுடன் ஊடாடி, அவற்றிலிருந்து வளர்ச்சி அடைவதற்கான விருப்பத்தை இளைஞர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டியது மட்டுமே.

வாசிப்பின் வீழ்ச்சி ஒரு சிறிய கலாசார மாற்றம் அல்ல. இது நீண்டகால விரும்பப்படாத இருளைக் கொண்ட ஒரு தேசிய சவால். இந்த விடயம் புறக்கணிக்கப்பட்டால், அது சிந்தனைத்திறன் குறைந்த நலிவான புத்தாக்கத் திறன் கொண்ட அடுத்த தலைமுறையை நமக்கு விட்டுச்செல்லும். ஆனால் மிக அவசரமான கவனத்திற்குரிய விடயமாக இதைக் கையாண்டால், இந்த சவால்களை சமாளித்து சிறந்த சந்ததியொன்றை உருவாக்க முடியும். இலங்கையின் இளைஞர்கள் எதிர்காலத்தில் உயிர்வாழும் திறன்களை மட்டுமல்லாமல் சிறப்பான வாழ்க்கைத் தரத்தை வடிவமைக்கும் தகவையும் பெற்றுக் கொள்வதற்கான ஒரு சிறந்த சாவியாக அமைவது வாசிப்புத்தான் என்பதை அனைவரும் உணர வேண்டிய முக்கிய தருணம் இதுவாகும்.

**தொகுப்பு:**
**பாலசிங்கம் சஜிந்ரன்**
**பாண்டிருப்பு.**

நாவெலி NAAVELI
நாவெளி
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
சனிக்கிழமை / மலர் - 22 / இதழ் - 50 / 25 ஐப்பசி 2025

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

எமது நாவிதன்வெவளி பிரதேச செயலகத்தின் கீழ் மாதந்தோறும் மின்னிதழாக வெளிவந்து சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற “நாவெளி” சஞ்சிகையின் வாசகர் உறவுகளுக்கு என் பணிவான வணக்கங்கள்!

அன்பர்களே! எமது பிரதேச மண்ணின் வாசனையை, மகிமையை உலகறியச் செய்வதற்கு இத்தகைய சிறப்பு மிக்க சஞ்சிகை ஒன்றை வெளியீடு செய்வதற்கு காரண கர்த்தாவாக விளங்குகின்ற எமது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அம்மணி அவர்களை பாராட்டியே ஆக வேண்டும். அதுமட்டுமன்றி இந் “நாவெளி” சஞ்சிகைக்கான ஆக்கங்களில் இப்பகுதிக்காக என்னைத் தூண்டி திறமையுடன் எழுத உற்சாக மூட்டி அன்பாக எழுத வைப்பதோடு சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருக்கும் எமது பிரதேச கலாசார உத்தியோகத்தர் “நகுலநாயகி” அம்மணி அவர்களையும் மிக்க நன்றியோடு பாராட்டுகின்றேன் கடந்த பௌர்ணமி விழாவிலே அன்னமலை வடபத்திரகாளி அம்மன் ஆலயத்திலே பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னை நாள் கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் திரு. சூரியகுமார் பார்த்தீபன் அவர்கள் நேரடியாக அவரை அழைத்து மேடையில் பாராட்டியிருந்தார். அத்தோடு எமது கலாசார உத்தியோகத்தர் அவர்கள் துரிதமாக தகவல்களை வழங்கியதனாலேயே சில பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடிந்தது. என்றும் கூறினார். அந்தவகையில் எமது கலாசார உத்தியோகத்தர் அவர்களுக்கும் நன்றி கூறி எமது “கிராமிய மக்களின் வாழ்வும் வளமும்” தொடருக்கு வருகின்றேன். கடந்த மாத இதழிலே திரு. சா. செல்வசிகாமணி அவர்களின் நாடகங்கள் “புத்தொளி” நாடக மன்றத்தில் இடம்பெற்றவை தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தேன்.

இனி இதே செல்வசிகாமணி அவர்களின் நாடகக்கலை பாடசாலைகளிலும் இடம் பெற்றதைப் பார்க்கலாம். இவர் ஒரு ஆசிரியராக இருந்த காலத்தில் கமு/ சது/ நாணமடு இந்துக்கல்லூரியில் 1992ஆம் ஆண்டு முதல் 2007வரை நாடகம் என்றால் அது ஐயா sir (புனைப்பெயர்) தான். வாணி விழா, ஆசிரியர் தின விழா, மாணவர் மன்றம் இவற்றில் கட்டாயமாக இவரது நெறியாள்கையின் கீழான நாடகங்கள் இடம்பெறத் தவறுவதில்லை. “வள்ளி திருமணம்” நாட்டிய நாடகம், “பானை பத்திரம்”, “முப்பெரும் தேவியர்”, “திருநீலகண்டர்” போன்ற புராண நாடகங்கள் புகழ்பெற்ற நாடகங்கள் ஆகும். அதுபோன்று பல சமூக நாடகங்களும் அரங்கேற்றம் பெற்றிருந்தன.

குறித்த ஆசிரியர் சிங்கள மொழியிலும் தேர்ச்சி உள்ளவர் என்பதால் இவரது நெறியாள்கையின் கீழ் றாணமடு இந்துக்கல்லூரியில் பல சிங்கள நாடகங்களும் இடம் பெறுவதுண்டு. பெரும்பாலும் மாணவர் மன்றங்களில் ஒரு சிங்கள நாடகமாவது இடம்பெறும்.

அது மட்டுமல்லாது இங்கே ஆங்கில நாடகங்களும் இடம்பெற்றன. இப்பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகவும் பின்னர் சம்மாந்துறைக் கல்வி வலயத்திலே ஆங்கில ஆசிரிய ஆலோசகருமாக சேவை ஆற்றிய திரு. பு. அன்ரனி அவர்கள் இப்பாடசாலையில் பல ஆங்கில நாடகங்களையும் அரங்கேற்றியிருந்தார். அவரது நாடகங்களில் "மெக் பத்", "ஜூலியஸ் சீசர்" போன்ற நாடகங்கள் புகழ்பெற்ற நாடகங்களாகும். இவை போட்டிகளுக்காகவும் கொண்டு செல்லப்பட்ட நாடகங்களாகும்.

திரு. பு. அன்ரனி தொடர்பாக சொறிக்கல்முனை கிராம நாடகக்கலை தொடர்பான விடயங்களை விபரமாகத் தருகின்றேன். திரு. செல்வசிகாமணி ஆசிரியரும் திரு. அன்ரனி ஆசிரியர் அவர்களும் மிகநெருக்கமான நண்பர்கள் என்பதால் இருவரும் ஒருவரது நாடகத்திற்கு மற்றவர் தேவையான உதவிகளை வழங்குவார்கள். புராண நாடகங்களுக்கான நடிகர், ஆடை அலங்கார வேலைகள் முதல் ஒப்பனை வேலைகள் அனைத்திற்கும் அன்ரனி ஆசிரியரின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும். இரவுபகல் பாராது பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பார். அமரரான பு. அன்ரனி ஆசிரியர் ஓர் கலைக்கூடம் என்றே கூறலாம்.

அடுத்ததாக அன்பர்களுக்கு இன்னுமோர் ஊரின் நாடகக்கலை தொடர்பான தகவல்களைத் தருகின்றேன். அதுதான் "உதயசூரியன்" கலைக்கழகம். இது இலுப்பைக்குளம் எனும் பகுதியில் அமைந்துள்ளது. 11ஆம், 13ஆம் கிராமங்கள் இரண்டும் இணைந்துள்ள ஓர் இடமாகும். இங்கு வாழ்ந்த திரு.சீனித்தம்பி அம்பலவாணன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கலைக்கழகமே இதுவாகும். இவரும் ஒரு நாடக எழுத்தாளர், தயாரிப்பாளர், நடிகர் என பல திறன்களைக் கொண்டிருந்தார். இவரால் பல புராண, சமூக காசிய நாடகங்கள் இயற்றி அரங்கேற்றப்பட்டன. இவரது நாடகங்கள் அவர்களின் பகுதியிலே அமைந்துள்ள ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறுவதுண்டு. அதுபோல் சில நாடகங்கள் படர்மலை கண்ணகியம்மன் ஆலயத்திலும் இடம் பெறுவதுண்டு. பின்னர் திரு. அம்பலவாணன் அவர்கள் இறைபதம் அடைந்ததன்பின் உதயசூரியன் கலைக்கழகத்தில் திரு. நடராசா புஸ்பராசா அவர்கள் (தற்போதய கிழக்குப்பல்கலைக்கழக பேராசிரியர்) தலைமைப்பொறுப்பை ஏற்று சில காலம் சில நாடகங்களை நெறிப்படுத்தி அரங்கேற்றியிருந்தார். பின்னர் அவர் தனது உயர் கல்விக்காக வெளிநாடு சென்ற பின்னர் திரு.மு.வாசுதேவன் அவர்கள் (செலிங்கோ நிறுவன உத்தியோகத்தர்) இக் கலைக் கழகத்தைப் பொறுப்பெடுத்து சில நாடகங்களைத் தயாரித்து வழங்கியிருந்தார். தற்போதும் இக்கழகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அடுத்ததாக "கதிரவன் கலைக்கழகம்" எனும் கழகம் தொடர்பாகவும் அதன் நாடகக்கலை தொடர்பாகவும் தகவல்களைத் தருகின்றேன். இக்கழகம் திரு. தம்பியப்பா சின்னத்துரை (அமரர்) அவர்களால் 13ஆம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இவர் 11ஆம் கிராம புத்தொழி நாடக மன்ற உறுப்பினராக இருந்து அவர் திருமணமாகி 13ஆம் கிராமத்தில் வாழ்ந்திருந்த காலத்தில் இக்கழகத்தை ஆரம்பித்து அதன் கீழ் பல சிறந்த நாடகங்களை இரசிகர்களுக்காக வழங்கியிருந்தார். இவர்களது நாடகங்கள் விளாவட்டவான் பிள்ளையார் ஆலயத்திலும், கண்ணகி அம்மன் ஆலயத்திலும் இடம்பெறுவதுண்டு. தற்போது இக்கழகம் புதிய தலைமுறையினரால் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

*சா.செல்வசிகாமணி*
*ஓய்வுநிலை அதிபர்*
*மத்தியமுகாம்.*



# விவசாயத்தில் காளான் உற்பத்தி மூலம் மனைப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு

இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் போசணை குறைபாட்டினை நிவர்த்தி செய்ய கூடிய குறைந்த செலவில் அதிக வருமானத்தை தரக் கூடியதும் மருத்துவ குணமிக்கதாகவும் இக்காளான் செய்கை காணப்படுகின்றது.

இலங்கையில் பிரதானமாக இரண்டு வகையான காளான்கள் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகின்றன. அதாவது சிப்பி/ ஓயிஸ்டர் காளான் (வெண் நிறமானது) அந்தோனி சிப்பிக் காளான்/ வைக்கோல் காளான் (கபில நிறமானது). இது பசிடியோமயிசிடிஸ் வகுப்பை சேர்ந்த பூஞ்சணம்/ பங்கசுவாகும். காளான் போசணை சத்து நிறைந்த உணவாக உள்ளதனால் இதிலிருந்து பல வகையான உணவுகள் தயாரிக்கப்பட்டு நுகரப்படுகின்றன.

இதற்காக 11 அடி நீளமான 10 அடி அகலமான 8 அடி உயரமுடைய கொட்டில்கள் அமைக்கப்பட்டு அதனுள் இறாக்கைகள் அமைத்து காளான் செய்கை பண்ணப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்பட்ட கொட்டிலில் அடைகாக்கும் அறை, அறுவடை அறை என இரண்டு அறைகள் காணப்படும். அடைகாக்கும் அறையில் 1500 பூஞ்சணம் வளர்வதற்காக வித்தியிடப்பட்ட ஊடக பைகளும், அறுவடை அறையில் பூஞ்சண இழை படர்ந்து அறுவடைக்கு தயாரான 1500 ஊடக பைகளையும் வைத்து பேணப்படுகின்றன. கொட்டிலினுள் செல்லும் போது தொற்றுகள் ஏற்படுவதைத் தவிர்க்க கை இகால்களை கழுவும் விதமாக கொட்டிலின் வெளியே நீர்த்தொட்டி/ Food bath ஒன்று அமைக்கப்படுகின்றது.

## காளான் வளர்ப்பிற்கு தேவையான மூலப்பொருட்கள் – 240 பைகளுக்கானது

1. மரத்தூள் - 100 Kg
2. அரிசித் தவிடு - 10Kg
3. நீர்ச்சுண்ணாம்பு/ CaCO3 - 02 Kg
4.மக்னீசியம் சல்பேற்று - 200g
5. சோயா/ பயறு மா - 01 Kg

## பொதியாக்கலுக்கான பொருட்கள்

1. PVC குழாய் - 05
2. இறப்பர் பட்டி - 05 பக்கட்
3.பொலிபுரப்பலின் பை ( 7" அகல 14" உயரம்) - 21/2 Kg
4. பஞ்சு ( 50g பக்கட்) - 05 பக்கட்
5. காளான் வித்தி - 08 பக்கட்

* 02 தகர பீப்பா ( Barrel ) காளான் உற்பத்திற்கான மூலப் பொருட்களை பொதி செய்த பின்னர் அவிப்பதற்காக தேவைப்படும்.

## காளான் உற்பத்தி முறையானது பல படிமுறைகளை கொண்டது

### 01. வளர்ப்பு ஊடகம் தயாரிப்பு

மரத்துண்டுகள்/ மரமீதிகள் அற்ற உலர்ந்த மரத்தூளை எடுக்கவும். சிறிதாக வெட்டப்பட்ட மரத்தூளே மிகவும் பொருத்தமானது. எனினும் சிறிதாக வெட்டப்பட்ட மரத்தூளின் 70% உம், சற்று பெரிதாக வெட்டப்பட்ட மரத்தூளின் 30% உம் கொண்ட கலவையினை பயன்படுத்தலாம். வெள்ளை/ சிவப்பு அரிசித் தவிடு பயன்படுத்தலாம். எனினும் பயன்படுத்தப்படும் தவிட்டில் அரிசி மீதிகள் காணப்படக்கூடாது.

முதலில் அரிசித்தவிடு, சுண்ணாம்பு, சோயா மாவினை கலந்து பெறப்பட்ட கலவையினை மரத்தூளுக்கு இட்டு நன்றாக கலக்கவும். பின் மக்னீசியம் சல்பேற்றினை நீரில் கரைத்து பெறப்பட்ட கரைசலினை பூவாளி ஒன்றினுள் இட்டு மேலதிக நீர் சேர்த்து மரத்தூள் கலவைக்கு இட்டு நன்கு கலக்கவும். தேவையான அளவு நீர் சேர்க்கப்பட்டபின் கையால் இறுக்கிப் பிடித்து விட்டு தளர்த்தும் போது 4-5 பகுதிகளாக உடைந்து செல்லும்.

### 02. வளர்ப்பு ஊடகம் தயாரித்தல்

பொலிபுறப்பலீன் பையினுள் கையை விட்டு மறுபக்கத்திற்கு பையினை திருப்பவும். தயாரித்த வளர்ப்பூடகத்தின் 01 Kg இனை அதனுள் நிரப்பவும். PVC குழாயினை பையின் நுனிப்பகுதியில் இட்டு ஏற்படும் துவாரத்தை பஞ்சு மூலம் நிரப்பவும். பின்னர் பஞ்சினால் மூடப்பட்ட துவாரத்தை கடதாசி துண்டினால் மூடி இறுக்கமாக இறப்பர் பட்டியினால் கட்டிக் கொள்ளவும்.

### 03. வளர்ப்பு ஊடகத்தை தொற்று நீக்குதல்

தேவையான பொருட்கள்:

1. சிறிய துளை கொண்ட மூடி பொருத்தப்பட்ட கிறிஸ்/ டீசல் பரல்

2. மரத்தால்/ இரும்பால் செய்யப்பட்ட 5 - 51/2" உயரமான பரலினுள் வைக்கக் கூடிய தாங்கி(Stand)

இடைவிட்டு அதாவது இடியாப்ப தட்டினை இடியப்ப சட்டியினுள் வைப்பது போன்று ஊடக பைகளையும் அடுக்கி வைத்து பரலினை இறுக மூடவும். மேற்படி முறையில் பரலினுள் அடுக்கப்பட்ட வளர்ப்பு ஊடகப் பைகள் சிறிய துளையிலிருந்து நீராவி வெளியேற தொடங்கியது முதல் 2 - 21/2 மணித்தியாலங்கள் வெப்பப்படுத்தி தொற்று நீக்கம் செய்யப்படும்.

## 04. விதை/ வித்தி இடல்

### தேவையான பொருள்கள்:

1. ஆரோக்கியமான வித்திப்பை
2. மெழுகுதிரி
3. தொற்று நீக்கி
4. மேசை

காளான் விதைகள்/ வித்திகளை பையினுள் இடுவதற்கு அறை ஒன்றினுள் உள்ள மேசை ஒன்றைப் பயன்படுத்தவும். ஆரோக்கியமான வித்திப்பை உள்ள நெல்மணிகளை தனித்தனியே வேறாக்கிக் கொள்ளவும். தொற்றுநீக்கி ஒன்றைப் பயன்படுத்தி அறையில் உள்ள மேசையை தொற்று நீக்கம் செய்யவும்.

1 - 1 1/2 சதுர அடியில் அமையும் வண்ணம் 04 மெழுகுதிரிகளை வைத்து பற்ற வைக்கவும். இளம் சூடான வெப்பத்தில் வளர்ப்பு பைகளைத் திறந்து அதனுள் 25 - 30 விதைகளை இடவும். பின் பஞ்சு, 3" * 3" நீள அகலமான காகிதத்துண்டு, PVC குழாய் துண்டினை பயன்படுத்தி வளர்ப்பு பையை மூடவும். ஒரு வித்திப்பை 50 - 55 வளர்ப்பு பைகளுக்கு போதுமானது.

## 05. பங்கசினை வளர்ப்பு பையினுள் வளர்த்தல்/ பரவவிடல்

இதற்காக பயன்படுத்தப்படும் அறை 75 வீதம் இருட்டாகவும், 26 - 28°C வெப்ப நிலையிலும் காணப்படல் வேண்டும். பங்கசு வளர்வதற்கு அமெரிக்கன் சிப்பி காளான் 25 - 30 நாட்களும், அபலோனி சிப்பக்காளான் 40 - 45 நாட்களும் எடுக்கும். வளர்ச்சி காலத்தில் வளர்ப்பு பைகளை அடிக்கடி அவதானித்து பாதிக்கப்பட்ட/ பழுதடைந்த பைகளை உடனடியாக அழித்து விடவும்.

## 06. காளான் உருவாவதற்கான உற்பத்தி கூடாரத்தை அமைத்தல்

### காளான் உருவாவதற்கு தேவையான காரணிகள்

1. வெப்பநிலை
2. சாராசரி ஈரப்பதன்
3. ஒளி/ வெளிச்சம்
4. சிறந்த காற்றோட்டம்

அவிக்கப்பட்டு/ தொற்று நீக்கப்பட்ட பைகளை ஆறவிட்டு வித்தி இடப்பட்ட வளர்ப்பு ஊடகத்தில் பூஞ்சண இழைகள் நன்றாக வளர்ச்சி அடைந்த பின் இப்பைகளின் முகப்பு வெட்டி அகற்றப்பட்டதும் அறுவடை அறையின் இறாக்கைகளில் கிடையாக அடுக்கி வைக்கப்பட்டு குளிர்ச்சியான சூழலில்











பேணப்படும் .

## 07. அறுவடை

முகப்பு வெட்டியதிலிருந்து ஒரு வாரத்தில் 7 - 10 நாட்களில் சிறிய மொட்டுகள் வர ஆரம்பிக்கும். மொட்டுகள் வர ஆரம்பித்து 03 நாட்களில் அறுவடையைத் தொடங்கலாம். அறுவடை செய்தபின் வளர்ப்புப் பையின் வாயிலை சுத்தம் செய்து நீர் தெளித்து விடவும். மீண்டும் 07 - 10 நாட்கள் இடைவெளியில் தொடர்ச்சியாக அறுவடையை பெறலாம்.

இவ்வாறு தொடர்ச்சியாக 03 - 04 1/2 மாதங்கள் அறுவடை செய்யலாம். சராசரியாக ஒரு பொதியில் இருந்து ஒரு கிலோகிராம் வரை பெறலாம். மேலும் முதல் 02 மாதங்களுக்கு அறுவடை பெறப்படும் அளவு படிப்படியாக அதிகரித்து அதன் பின் படிப்படியாகக் குறையத் தொடங்கும்.

இக்காளான் செய்கை குறைந்த மூலதனம், நேரம், தொழில்நுட்ப அறிவு என்பனவற்றைக் கொண்டு சுயதொழில் ஆக பெண்களால் மேற்கொள்ளக் கூடிய ஒரு தொழிலாக உள்ளமையால் மனைப் பொருளாதாரத்தில் ஒன்றரை மாத காலத்திலேயே வருமானம் பெறக்கூடிய ஒரு தொழிலாக உள்ளதுடன் பெண்களின் பங்களிப்புடனான ஒரு விவசாய செய்கையும் ஆகும்.

ஆக்கம்:

மு.ஹ. முர்ஷிதா ஷிரீன்
(விவசாய போதனாசிரியர் - ஏறாவூர்)
சம்மாந்துறை, இலங்கை

நாவெளி NAAVELI
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
சனிக்கிழமை / மலர் - 22 / இதழ் - 50 / 25 ஐப்பசி 2025

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



# காணிச் சட்டங்கள்

N.M.M.A.Sujan
Colonization Officer

# அரச காணி ஆவணங்களும் அடுத்துரிமை நியமனமும்

## பாதுகாப்பு அதிகாரம் உள்ளவர்

**(1)** அரசாங்க அதிபர் மூலம் தமக்குத் தேவையானதென தெரியும் வண்ணம் பரீட்சித்துப் பார்த்த பின்பு ஏதாவது காணித்துண்டிற்கு அல்லது அனுமதிப்பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட காணிக்கு உரிமையாளராக பராயமடையாதவரை நியமித்திருப்பின் அது எவ்வித எழுத்து மூலமான சட்டத்தில் என்ன குறிப்பிட்டிருப்பினும் அக்காணி அல்லது காணித்துண்டு தொடர்பாக அப்பராயமடையாதவருக்கு உரிமையின்படி நடவடிக்கை எடுக்க இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அவரால் நிறைவேற்றப்பட வேண்டியவை தொடர்பான பொறுப்புக்கு பொருத்தமானவரை பாதுகாப்பு அதிகாரம் உள்ளவராக நியமிக்க அவருக்கு அதிகாரமுள்ளது.

**(2)** 1ஆவது உபபிரிவின்கீழ் பாதுகாப்பு அதிகாரம் உள்ளவராக நியமிப்பது தொடர்பான ஆவணத்திற்கு முத்திரைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

**(3)** 1ஆவது உபபிரிவின் கீழ் நியமிக்கப்படும் பாதுகாப்பு அதிகாரம் அளிக்கப்பட்டவர் காணித்துண்டின் உரிமையாளராக அல்லது அனுமதிப்பத்திரக்காரராக பராயமடையாதவர்மேல் வழங்கப்பட்டுள்ள சகல நடவடிக்கைகளையும் செய்வதற்கு பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு பொறுப்பானவராக வேண்டும். மேலும் அரசாங்க அதிபர் மூலம் பரீட்சித்துப்பார்த்த பின்பு அந்த அதிகாரம் அளிக்கப்பட்டவர் பொறுப்புகளை நிறைவேற்றாது இருப்பதாக அல்லது நடவடிக்கைகளை கடமைகளை தவிர்த்திருப்பதாக பராயமடையாதவரின் உரிமைக்கு பாதகமாக செய்யும் பிழைகளை செய்திருப்பதாக இருப்பின் பாதுகாப்பு அதிகாரம் அளிக்கப்பட்டவர் தொடர்ந்து அப் பதவியில் இருப்பது பொருத்தமற்றதென அறிந்தால் அவ்வாறு இல்லையாயின் வேறு ஏதாவது காரணங்களின் அடிப்படையில் அவரை அப்பொறுப்பில் இருந்து நீக்குவதற்கு அரசாங்க அதிபருக்கு முடியும்.

ஏதாவது பாதுகாப்பு அதிகாரம் உள்ளவர் தாம் பதவியில் இருந்து நீக்கப்பட்டது தொடர்பான அரசாங்க அதிபரின் கட்டளைபற்றி விருப்பம் அற்றிருப்பின் குறிப்பிட்டபடி அமைச்சருக்கு மேன்முறையீட்டை சமர்ப்பிக்க அவருக்கு முடியும்.

**(4)** பராயமடையாதவரின் பாதுகாப்பு அதிகாரம் அளிக்கப்பட்டவராக முதலாவது உப பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவருக்காக முறையான அதிகாரமுள்ள நீதிமன்றம் மூலம் வேறு எவரும் நியமிக்கப்படும்போது 1ஆவதாக அதிகாரமளிக்கப்பட்டவர் தொடர்ந்து அப் பொறுப்பில் இருக்க முடியாது.

**(5)** இப்பிரிவின் நடைமுறைகளின்கீழ் 1ஆவது உபபிரிவின் நடைமுறையின் கீழே பராயமடையாத ஒவருக்கு பாதுகாப்பு அதிகாரமளிக்கப்பட்டவராக நியமிக்கப்பட்ட நபர் அந்தப் பராயமடையாதவரின்

காணித்துண்டு அல்லது அனுமதிப்பத்திரத்தின் மூலம் பாராதீனப்படுத்தப்பட்டு அந்தப் பராயமடையாதவருக்கு அடுத்துரிமை கிடைத்த காணி தொடர்பாக மற்றும் அக்காணியின் அல்லது காணித்துண்டின் முகாமைத்துவம், நிர்வாகம் வகிப்பது மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக சகல உரிமைகளையும் பிரயோகிப்பதற்கும் முறையான அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரமளிக்கப்பட்டவரின் கட்டுப் பாடுகளுக்கும் கீழ்படிய வேண்டும்.

## பாராதீனப்படுத்தப்பட்ட காணி தொடர்பாக 19(அ) 2 பிரிவின் கீழே குத்தகை செலுத்திக் கொண்டிருந்த அனுமதிப்பத்திரக்காரரின் மரணத்தின்பின் அடுத்துரிமை

அனுமதிப்பத்திரம் மூலம் பாராதீனப்படுத்தப்பட்ட காணி தொடர்பாக 19ஆவது பிரிவின்கீழ் வருடாந்த தவணைக் கட்டணம் செலுத்திக் கொண்டிருந்த அனுமதிப்பத்திரக்காரர் இறக்கும்போது

(அ) அனுமதிப்பத்திரக்காரரின் உயிருடன் இருக்கும் வாழ்க்கைத்துணைக்கு காணியின் அடுத்துரிமை உரித்தாகும்.

(ஆ) அனுமதிப்பத்திரக்காரர் இறக்கும்போது வாழ்க்கைத்துணை உயிருடன் இல்லையாயின் அல்லது உயிருடன் இருந்தாலும் வாழ்க்கைத் துணை அனுமதிப்பத்திரக்காரரின் மரணத்தின் பின்பு காணியின் அடுத்துரிமைக்கு நியமிக்கவில்லையாயின் குறித்தபடி அனுமதிப் பத்திரக்காரர் மூலம் பெயரிடப்பட்ட வேறு யாராவது அனுமதிப்பத்திரகாராரின் மரணத்தின் பின்பு இக் கட்டளைச் சட்டத்தின் நடைமுறைகளின்படி வசிப்பதற்காக அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக் கொண்ட அனுமதிப்பத்திரம் மூலம் காணியின் அடுத்துரிமைக்கு உருத்துக் கிடைக்கும்.

## சில வேளைகளில் காணி அரசுக்கு மீண்டும் வழங்கப்படுகின்றமை

அனுமதிப்பத்திரத்தின் மூலம் தாம் அனுபவிக்கும் காணி தொடர்பாக 19ஆவது பிரிவின் கீழ் தவணைக் கட்டணம் செலுத்திக் கொண்டிருந்த அனுமதிப் பத்திரக்காரர் இறக்கும்போது 84ஆவது பிரிவின் கீழ் காணிக்கு அடுத்துரிமைக்கு உரிமை பெற்ற நபர் அவ்வாறு அடுத்துரிமைக்கு தெரிவாக வில்லையாயின் அக் காணியின் உரிமை அந் நபர் மூலம் மீண்டும் அரசுக்கு பாரமளிக்கப்பட்டதென கருதப்படும்.

## மீண்டும் பாரமளிக்கப்பட்ட காணி வழங்கப்படும்

85ஆவது பிரிவின்கீழ் மீண்டும் பாரமளிக்கப்பட்டதெனக் கருதப்படும் காணி சகல கட்டுப்பாடுகளுமின்றி அரசுக்கு வழங்கப்படும்.

## அனுமதிப்பத்திரக்காரர் மூலம் பெயரிடப்பட்ட அடுத்துரிமையாளரின் பெயர் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் முன்பு அதில் குறிப்பிடப்படல் முடியும்

அனுமதிப்பத்திரம் மூலம் காணியை வழங்க அரசாங்க அதிபர் ஏற்றுக் கொள்ளும் ஒருவருக்கு அடுத்துரிமையாளரை பெயரிட முடியும். அந்த அடுத்துறுபவர் இந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பின் உரிமையாளராக பெயரிடக்கூடிய நபராக இருக்க வேண்டும். அனுமதிப்பத்திரக்காரருக்கு அனுமதிப்பத்திரம் வழங்க முன்பு பின் உரிமையாளரின் பெயர் அங்கு சேர்க்கப்படல் வேண்டும். அந்த பின் உரிமையாளரின் பெயர் இரத்துச் செய்யப்பட்டு அவருக்காக வேறு நபரின் பெயர் பின் உரிமையாளராக சேர்த்துக் கொள்ளுமாறு அனுமதிப்பத்திரக்காரர் விண்ணப்பித்தால் முன்பு பெயரிட்டதை இரத்துச் செய்து புதிய பெயரிடலை குறிப்பிட்டு அனுமதிப்பத்திரத்தில் குறித்து வழங்க அரசாங்க அதிபருக்கு முடியும்.

தொடரும்...

# சாலைகள் நடந்து பார்த்ததுண்டா..? இல்லையா.?

நாம் சாலையில் நடந்ததை
உணருங்கள்
சாலையும் நம்முடன்
நடக்கிறது என்பதை...

ஓர் நீண்ட
பயணத்தில்
வழியறியாப் பாதையில்
வழியறிந்து நடக்கின்றோம்
வழிகாட்டியாய்ச் சாலையும்
நம்முடன் நடக்கிறது
சாலையில் பார்ப்பவைகள்
உண்மையல்ல
கடந்து கொள்ள கரைந்து விடும்
அனைத்தும் கற்பனையே

நீளமான சாலையில் நீளாத
பயணங்களில்
முகத்திரைகள் மூடியும்
நகர்வலம் அடங்கிடாமல்
பட்டுத் தெளிந்து எல்லைக் கோடுகள்
வகுத்த உலகில் பயணங்களுக்கு
உத்தரவாதமில்லை.

*யோகராசா கவிதா*
*அன்னமலை-01*

# கல்லறை




ஓர் புதிய
அனுபவம்
பெறப் போகிறேன்
வெள்ளைச் சாயம்
கொண்டேன் அமைதியின்
உறைவிடம் அலறிடும்
அழுவார் கூட்டமும்
என் அருகில் அனைத்தும்
கடந்து இயற்கையின்
ஓர் சலசலப்பு மட்டும் என் செவிப்
பாறைகளில்
உள் வாங்கிக்
கொண்டேன்

*யோகராசா கவிதா*
*அன்னமலை-01*



# தட்டைப்பயறு சுண்டல்

**செய்முறை:** சோளத்தில் சிறிது தண்ணீர் தெளித்துப் மிக்ஸியில் 2 முறை சுற்றி எடுத்து, தண்ணீரில் கழுவினால் தோல் நீங்கிவிடும். குக்கரின் முதல் அடுக்கில் 2 கப் தண்ணீரில் சோளத்தைப் போடவும். அடுத்த அடுக்கில் அரை கப் தண்ணீரில் தட்டைப் பயறை வைத்து 6 விசில் வந்ததும் இறக்கி இரண்டையும் வடிகட்டவும். கடாயில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம்பருப்பு தாளித்து, வெங்காயம், பச்சை மிளகாய், மஞ்சள்தூள், கறிவேப்பிலை போட்டு வதக்கவும். அதில் வேக வைத்து வடிகட்டிய சோளம், தட்டைப்பயறு. உப்பு சேர்த்து நன்றாகக் கிளறவும். பிறகு, தேங்காய் துருவல், நறுக்கிய கொத்தமல்லி தூவிக் கிளறி, இறக்கி பரிமாறவும்.

-R.றூபிகா

**தேவையானவை:**

- சோளம் ஒரு கப்
- தட்டைப்பயறு
- வெங்காயம் நறுக்கியது - தலா கால் கப்
- பச்சை மிளகாய் 2
- மஞ்சள்தூள் கால் டீஸ்பூன்
- கறிவேப்பிலை
- கொத்தமல்லி - சிறிதளவு
- தேங்காய் துருவல் ஒரு டேபிள்ஸ்பூன்
- எண்ணெய்
- கடுகு
- உளுத்தம்பருப்பு சிறிதளவு
- உப்பு தேவையான அளவு



# கலையுடனும் இசையுடனும் வாழும் நாவிதன்வெளி

## மனோரஞ்சினி



கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் அழகுநிறை பாண்டிருப்பு கிராமத்தில் பிறந்த சதாசிவக் குருக்கள் மனோரஞ்ஞினி அவர்கள் சிறுவயது முதலே கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவராகவும், இளமைத் துடிப்போடு வலம் வந்தவராவார். நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் வெளிவரும் நாவெளி பத்திரிகை யின் படலையைத் தேடி பக்கத்திற்காக அண்மையில் இவரை நாம் சந்தித்தோம்.

தனது இளம் வயது முதல் இன்று வரை கலை இலக்கியம், சங்கீதம், சமயம் சார் தனது செயற்பாடுகள் குறித்து பல்வேறு அனுபவக் குறிப்புகளை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அதனை நமது வாசகர்களுக்காக இங்கு நாம் பிரசுரிக்கிறோம்.

மனோரஞ்சினி, சங்கீதத்தில் ஆர்வம் கொண்டு 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் களுவாஞ்சி குடியைச் சேர்ந்த சங்கீத ஆசிரியை சரோஜினியிடம் சங்கீதம் கற்றவர். இவர் தனது ஆரம்பக்கல்வியை வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்திலும், பின்னர் பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயத்தில் தரம் 3 தொடக்கம் உயர்தரம் வரை கல்வி கற்றார்.

தனது பாடசாலை காலத்தில் நாடகம், நடனம், கவிதை, வாணி விழா போன்ற சமய நிகழ்ச்சிகளிலும் பண்ணிசையைப் பாடி கலை இலக்கியப் போட்டிகளில் கலந்துகொண்டு தனது திறமையை வெளிக்காட்டிய ஒருவராவார்.

2001ஆம் ஆண்டு தொடக்கம் 2003ஆம் ஆண்டு வரை வாணி மகா வித்தியாலயத்தில் தொண்டர் ஆசிரியராகவும் மாணவர்களுக்கு தனது கற்பித்தல் சேவையைத் தொடர்ந்து தமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் பின்னின்று பணியாற்றியுள்ளார். அதன் பின்னர் இன்றுவரை சைவ மறுமலர்ச்சி சரஸ்வதி அறநெறி பாடசாலையில் பண்ணிசை ஆசிரியராகவும் மாணவர்களுக்கு தமது சமயம் சார்ந்த கல்வியையும் ஒழுக்கக் கல்வியையும் போதித்து வருகின்றார். இவரிடம் கல்வி கற்ற இப் பிரதேசத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் இன்று பல்கலைக்கழகங்களுக்கு சென்று சமூகத்தில் நல்ல நிலையில் உள்ளனர்.

1994ஆம் ஆண்டு நாவிதன்வெளி மத்தியமுகாமைச் சேர்ந்த மதகுரு ஜீவரெட்ணம் என்பவரை திருமணம் செய்து அங்கேயே வசித்து வருகிறார். இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். அவரது மூத்த மகள் திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றார். இரண்டாவது மகள் இன்னும் திருமணம் செய்யாத நிலையில் இவருடன் வாழ்ந்து வருகின்றார். எதிர்பாராத விதமாக இவருடைய கணவர் 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி திடீர் மரணமான சம்பவம் இவருடைய வாழ்வில் தாங்க முடியாத பேரிழப்பை ஏற்படுத்தியது. இருந்தாலும் தனது மனம் சோர்வடையாமல் குடும்பத்தையும் பிள்ளைகளையும் தனது ஜீவனோபாய தொழிலையும் முன் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பை ஏற்று இன்றுவரை ஒரு குடும்பத் தலைவியாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றார்.

அத்துடன், அகில இலங்கை சைவசமயப் பரீட்சையில் 1976ஆம் ஆண்டு சித்தியடைந்தார். வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் 1981ஆம் ஆண்டு சித்தியடைந்தவர். 1985ஆம் ஆண்டு சர்வதேச இளைஞர் ஆண்டு தனிப்பாடல் போட்டியில் வெற்றி பெற்றார். தேசிய இளைஞர் சம்மேளனக் குழு அங்கத்தவராக 1986ஆம் ஆண்டு இணைந்து கொண்டார். சமய கலாசார அறிவும் திறன்களும் பிரிவில் தேசிய சான்றிதழைத் தனதாக்கினார். கொழும்பு விவேகானந்தா சபை பரீட்சையில் சித்தியடைந்தார். நடமாடும் பெண்கள் பயிற்சி நெறியில் தையல், மனையியல் மற்றும் கைவினைப்பொருள்களுக்கான பயிற்சிநெறியையும் பெற்றுக்கொண்டவர். இதைவிட பண்ணிசைப் போட்டியிலும் விசேட சித்தியடைந்தார். 2001ஆம் ஆண்டில் இருந்து முன்பள்ளி ஆசிரியையாகவும் தனது பணியைத் தொடர்கிறார். இசையும் கலையும் பிடித்துப்போனதால் சிறுபிள்ளைகளை அதனூடாக மகிழ்வித்து வருகிறார்.

தான் வாழும் காலம் வரை தன்னுடைய சங்கீதத் துறையிலும் பணி செய்து, சமய கற்றல் செயற்பாடுகளிலும் தொடர்ந்து பயணிப்பதாக எம்மிடம் நம்பிக்கையோடு தனது கருத்துகளைக் கூறினார்.

தான் கற்றுக் கொண்டதை தனது சமூகத்திற்கும் எதிர்கால சந்ததிகளுக்கும் கற்றுக் கொடுத்து அவர்களை வழிகாட்டுவது எனக்கு ஆத்ம திருப்தி தருகிறது என்கிறார். தனது பணியினைச் செய்து கொண்டு தனது பிள்ளைகளை நடனத் துறையிலும், கலைத் துறையிலும் அதிக ஆர்வத்தோடு பயிற்றுவித்த இவர் தற்போது, சைவ மறுமலர்ச்சி சரஸ்வதி அறநெறி பாடசாலையில் ஆசிரியராகவும் அதே நேரம் வார நாள்களில் கலைவாணி முன்பள்ளி பாடசாலையையும் நடத்தி வருகின்றார். இவரைப் போன்று சமூக ஆர்வலர்கள் வாழ்வதனால் தான் பிரதேசத்தின் சிறுவர் மேம்பாடு மற்றும் பாலர் கல்வி சிறப்பாக முன்கொண்டு செல்லப்படுகிறது எனலாம். அர்ப்பணிப்போடு வார நாள்களிலும் வார இறுதி நாள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அறநெறி பாடசாலையில் என தனது வாழ்நாளில் பெரும்பாலான நேரத்தை மாணவர்களின் கல்வி செயற்பாட்டிற்கும் சமய கல்விக்கும் பணி செய்து வருகின்றார். அதே நேரம் கலை, இலக்கியத் துறைக்கும் தனது நேரத்தைப் பயன்படுத்தி வருவதைக் கேட்டறிந்து கொண்ட போது மனம் நெகிழக்கூடிய மெச்சத்தக்க விடயங்களாக காணப்பட்டன.

அவரது கலை, இலக்கிய, சமய, மற்றும் சமூகப் பயணம் தொடர "நாவெளி" மின்னிதழ் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

தொகுப்பு:
ஏ.எல்.எம். ஷினாஸ்,
என்.நீலேந்திரன், ஏ.ஏ.அஸீம்

නාවැලි NAAVELI
நாவெளி
பிரதேச செயலக மாதாந்த இலத்திரனியல் சஞ்சிகை



**நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் மாதாந்தம் தொடர்ச்சியாக வெளிவருகின்ற நாவெளி மின்னிதழுக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

### பின்வரும் தலைப்புகளில் ஆக்கங்களை அனுப்ப முடியும்.

- வாழ்வியல் தத்துவம்
- பொருண்மியம்
- உலக அரசியல்
- கதைச் சாளரம் (சிறுகதை, மர்மத் தொடர்)
- அறிவுக்களஞ்சியம்
- மாணவர் அரங்கம்
- கல்வி, சட்டம் கற்போம்
- மனிதம் அல்லது மானுடம்
- விளையாட்டும் தேகாரோக்கியமும்
- கதம்பம் - (சமையல் கலை / அழகும் ஆரோக்கியமும் / வீட்டுக் குறிப்பு )
- பெண்ணியம்
- மருத்துவமும் நாமும்
- கவிதைச்சாரல் (மரபுக்கவிதை, நவீன கவிதை, ஹைக்கூ )

### கவனிக்க வேண்டியவை:

- ஒரு ஆக்கம் வேறு ஏதேனும் பிரசுரிப்பில் வந்திருந்தால், அதன் மறு பிரசுரம் என்பதை தாங்கள் உறுதிப் படுத்தல்.
- தகவலுக்கான பொறுப்பினை தாங்கள் எடுத்தல்.
- உத்தியோகப் பற்றற்ற, சந்தேகத்திற்கு இடமான தகவல் என நீங்கள் கருத்துமிடத்து, அதனை எமக்கு அனுப்பாதிருத்தல்.
- ஆக்கமும், ஆக்கம் தருபவர் பெயரும், தங்களிடம் எதிர் பார்க்கப்படும்.
- சஞ்சிகைக் குழுவின் இறுதித் தீர்மானத்தின் படி ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

**தங்கள் ஆக்கங்களின் மென்பிரதிகளை (Soft Copy)**

**▶ 0755424333 எனும் WhatsApp இலக்கத்திற்கு**

**▶ it@navithanveli.ds.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு**

**ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க முடியும்.**



**உங்கள் ஆதரவை எதிர்பார்த்து...**
**என்றும் அன்புடன்,**
**மின்னிதழ் குழு.**